கடவுள்துணை.

# தன்வந்திரி

## ஸூக்ஷ்ம வைத்தியம் - உா.

இஃது

யூநாநி வைத்திய

தாருட்யவிர்த்திபோதினி முதலிய

பல வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய

ஹக்கீம்

பா.- முஹ:ம்மது அப்துல்லா சாஹிபு

அவர்களால்

சென்னை:

முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப் பட்டது.

FIRST EDITION.

1907ஹு

Rigistered Copyright.

கைவிலை ரூ 0-5-0.     வி-பி ரூ 0-7-0.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் தெரியப் படுத்துவது யாதெனில்:—" தன்வந்திரி சூக்ஷும வைத்தியம் - உா. என்ற இக்கிரந்தம் கஅசுஎ ஹ (உடு-வது) ஆக்டின் (உ0வது) பிரிவில் (சு-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மத்ராவிலும்,

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது அல்லது இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது, இதில் ஏதேனும் பாகத்தையாவது, என் உத்தரவின்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

ஹக்கீம் - பா - முகம்மது அப்துல்லா.



T. 18546

# விசேஷ விளம்பரம்

எம்மால் அச்சிடப்பட்டிருக்கும் கிரந்தங்களின் டைட்டில்பேஜில் அடியிற் கண்டிருக்கின்ற என்னுடைய பெயர் எழுதப்பட்டிருக்கும். அவ்விதப் பெயர் எழுதப்படாத கிரந்தங்கள் மாறுபாடானவையாயிருக்கும்; ஆனதுபற்றி, அப்படிப்பட்ட கிரந்தங்களைக் கொண்டுவந்து கொடுக்குமவர்களுக்கும், அல்லது, அப்படிப்பட்ட கிரந்தங்களை வைத்து விற்பனை செய்யுமவர்களைக் காண்பிக்கு மவர்களுக்கும் தக்க வெகுமதி கொடுக்கப்படும்.

ஹக்கீம் - பா -முகம்மது அப்துல்லா.

# புத்தக விளம்பரம்.

இதனடியிற் கண்ட புத்தகங்கள் வேண்டியவர்கள் சென்னை மாபூஸ்கான் தேவடி, அப்புமேஸ்திரி வீதி, 12-வது நெம்பர் கிரகத்தில் இருக்கும் ஹக்கீம் - பா - முகம்மது அப்துல்லா சாஹிபு அவர்களிடத்தில் கைவிலைக்கும், வாலியூ பேயபல் போஸ்ட் மூலமாகவும், இதனடியிற்கண்ட விகிதப்படி பெற்றுக் கொள்ளலாம்.

| | கைவிலை. | | | வி-பி. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| * அநுபோக வைத்திய நவநீதம் முதற்பாகம்……………… | 1 | 0 | 0 | 1 | 2 | 0 |
| * ஷை இரண்டாம் பாகம்…… | 1 | 0 | 0 | 1 | 2 | 0 |
| * விஷபேதி நிவாரணி……… | 0 | 4 | 0 | 0 | 6 | 0 |
| * கடுக்காய்ப் பிரபாவ போதினி | 0 | 2 | 0 | 0 | 4 | 0 |
| * வைத்தியத் திருப்புகழ்…… | 0 | 12 | 0 | 0 | 14 | 0 |
| * இலக்கசௌமியசாகரம் மூலமும் உரையும், முதற்காண்டம். இரண்டாங் காண்டம் | 1 | 0 | 0 | 1 | 3 | 0 |
| * ஷை மூன்றும்காண்டம், நாலாம் காண்டம்………………… | 0 | 14 | 0 | 1 | 0 | 0 |
| * அகஸ்த்தியர் பள்ளு ௨௦௦.…… | 1 | 0 | 0 | 1 | 2 | 0 |
| யூநாநிவைத்திய தாருட்யவிருத்திபோதினி முதற்பாகம்… | 1 | 5 | 0 | 1 | 8 | 0 |

* இவை நூதனமாய் அச்சிடப்பட்டவைகள்.

| | |
|---|---|
| ஷை 2-ம் பாகம்-க-க்கு……………… | 2 0 0—2 4 0 |
| ஷை திறவுகோல்-க-க்கு……… | 0 10 0—0 12 0 |
| பிரமேக நிவாரண போதினி…… | 0 12 0—0 14 0 |
| சிராவக நிவாரண போதினி…… | 0 13 0—0 15 0 |
| ஆயுள்வேத சிரோமணியென்னும் வைத்தியசிந்தாமணி முதற்பாகம்……………… | 0 14 0—1 0 0 |
| சரபேந்திர மேக நிவாரண போதினி……………… | 1 0 0—1 3 0 |
| பிளேக் சிகிச்சா போதினி…… | 0 8 0—0 11 0 |
| அகத்திய முனிவர் மஹாதிராவகம் எண்ணூறு……… | 1 0 0—1 2 0 |
| தேரையர் எதுகை யமகவெண்பா, அல்லது, இராஜவைத்தியமகுடம் மூலம்……… | 0 6 0—0 8 0 |
| ஷை முதற்பாகம் மூலமும் உரையும்……………… | 1 5 0—1 8 0 |
| ஷை 2-ம் பாகம்……………… | 1 5 0—1 8 0 |
| யூநானி சிரோரோக நிவாரண போதினி……………… | 1 5 0—1 8 0 |
| யூநானி நயனரோக நிவாரண போதினி……………… | 1 5 0—1 8 0 |
| இரசவாத சிந்தாமணி முதற்பாகம்……………… | 1 5 0—1 8 0 |
| ஷை 2-ம் பாகம்……………… | 1 5 0—1 8 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொங்கணர் வாதகாவியம் மூவாயிரம்……………… | 1 | 8 | 0—1 | 12 | 0 |
| அகத்திய மஹாமுனி வைத்தியப் பிள்ளைத் தமிழ்……… | 1 | 4 | 0—1 | 7 | 0 |
| அகத்தியர் மெய்ஞ்ஞானம் .. | 1 | 4 | 0—1 | 7 | 0 |
| தேரையர் வைத்திய மஹாகரிசல் | 0 | 10 | 0—0 | 11 | 0 |
| சரபேந்திர கபமருந்துமஞ்சரி | 0 | 8 | 0—0 | 10 | 0 |
| யூகிமுனிச் சுருக்கம்…………… | 0 | 2 | 0—0 | 4 | 0 |
| அசன்பே சரித்திரம் ………… | 0 | 8 | 0—0 | 10 | 0 |

கடவுள் துணை.

## தன்வந்திரி சூக்ஷம வைத்திய-ா

# முகவுரை.

சகோதரர்களே! இக்கிரந்தத்தை வெளியிட நேரிட்ட விஷயம் பின்வரும் காரணங்களினுல் பூரணமாகத் தெரியவரும்.

சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள், ஆகிய இம்மகான்களுள் தன்வந்திரி பகவான் தேவ வைத்தியர் என்பதும், சிரேஷ்ட வைத்தியர் என்பதும் உலகறிந்த விஷயம்.

இம்மகான், சமஸ்கிருதத்தில் அநேக வைத்திய கிரந்தங்களை லோகோபகாரமாகவும், ஜீவகாருண்யமாகவும், வெளியிட்டிருக்கின்றனர். அந்நூற்கள் அப்பாஷை தெரிந்தவர்களுக்கு உபயோகப்படுமே தவிர ஏனையோர்களுக்கு உபயோகப்படாதென்பது பிரசித்தமான விஷயம், ஆகையால், தென்னுட்டிலுள்ள தமிழ்ப்பாஷை பழக்கமுள்ளவர்களுக்கும் உபயோகப்படும்படியாக அம்மகான் தமிழிலும் பற்பல வைத்திய கிரந்தங்களை பேரன்புடன் வெளிப்படுத்தி யிருக்கின்றனர். அந்த நூற்களில் சூக்ஷம வைத்திய

மென்னும் இக்கிரந்தமும் ஒன்று. இக்கிரந்தத்தில்மாத்திரைகள், தைலங்கள், எண்ணெய்கள், சூரணங்கள், கிருதங்கள், ஆக்கிராணங்கள் முதலிய பல முறைகள் வெகு சூக்ஷ்மமாகவும் அதிக சுலபமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை முறைப்படிசெய்து அநேக ரோகங்களை நிவர்த்தித்து ஜெயப்பெற ஏதுவாகும், ஆனால், இந்நூல் கிடைக்கப்பெற்ற ஒவ்வொருவரும் தம்தம் பரம்பரையில் பரம ரகசியமாய் வைத்து வந்தார்களே யொழிய இது வரையில் அச்சிட்டு வெளிப்படுத்தினவர்கள் அல்லர். அவ்விதமே அடியேனது பரம்பரையார்களும் இந்நூலை பரமரகசியமாய் வைத்து வந்தனர்.

ஆனல், அடியேனல் செய்யப்பட்ட வைகளும், வெளிப்படுத்தப் பட்டவைகளுமான யூநாநி வைத்திய தாருட்யவிர்த்திபோதினிமுதல் இலக்கி சௌமிய சாகரம் ஈறுவுள்ள பல்வித கிரந்தங்களையும் கைக்கொண்டு அவற்றல் பலவித நன்மைகளையும் சுகிர்தங்களையும் அடைந்து, நம்மைப் பலவிதத்தாலும் ஆதரித்து கனப்படுத்திவரும் சுதேசாபிமானிகளாகிய கனவான்களின் முக்கிய கோரிக்கையாவது:—இதுவரையில் அச்சிட்டு வெளிப்படாதவைகளும், அருமையான வைகளுமான பல அரியநூதன கிரந்தங்கள் அடியேனல் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்பதேயாம்.

இதுவுமன்றி, ஸ்ரீ - ல - ஸ்ரீ, தே, வே, சாமியார் என்னும் வாலாம்பிகைதாச சாமியார் அவர்கள், லோகோபகாரமாகவும், ஜீவகாருண்ய மாகவும், வெளிப்படுத்தும்படியாக தம் பரம்பரையிலும், தமக்கும் அநுபவசித்திபெற்ற பற்பல நூதன கிரந்தங்களைத்தந்து, அவைகளையும் அச்சிட்டு வெளிப்படுத்தும்படி அருள் புரிந்திருக்கின்றனர். அவற்றுள் இந்த தன்வந்திரி சூட்சும வைத்தியம் என்னும் இதுவுமொன்று. இந்த நூல் அவர்கள் பரம்பரையிலும், அநுபவ சித்தமாக கைபாண்டு வந்ததாகையால் இதனையும் அச்சிட்டு வெளிப்படுத்தும்படி வற்புறுத்தினர்.

ஆகையால், மேற்கண்ட சுதேசாபி மானிகளின் விருப்பத்தையும், ஸ்ரீ - ல - ஸ்ரீ, சாமியாரவர்களின் அன்பார்ந்த கட்டளையையும் அவலமாக்க வசமற்றவனாய் இவ்வரிய நூலையும் அச்சிட்டு வெளிப்படுத்த முன்வந்தேன்.

இதில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு முறையும் மிகவும் அருமையானது. ஒவ்வொரு பாகமும் யாவருந் தெரிந்துகொள்ளும் விதமாய் மிகவும் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இவை யநுபவத்திற்கும் ஒத்தேவருகின்றன. மனிதர்களைக் கஷ்டப்படுத்தும் மகாரோகம் முதலிய துஷ்ட நோய்களினின்று ஈடேற்ற விரும்பும் ஒவ்வொருவரி

டத்திலும் இக்கிரந்தம் அவசியம் இருக்கத்தக்கது. இதனைப்பார்வையிடும் ஒவ்வொருவரும் இதன் உபயோகத்தை யொருவரெடுத்துக் காண்பிக்காமலே தாம்தாமே தெரிந்துகொள்ளக் கூடுமாகையால் அதைப்பற்றி யிங்கு அதிக விரிவாய்ச் சொல்வது அனுவசியம்.

இவ்வபூர்வ கிரந்தமானது நேர்த்தியான கிளேஸ் கடிதத்தில் நேர்த்தியாகவும் அச்சிடப்பட்டிருக்கிறது.

இது யாவருக்குங் கிடைக்கும்படி மிகவும் குறைந்த விலையாகவே யேற்படுத்தப் பட்டிருக்கின்றது.

இக்கிரந்தம் பிரதி-1-க்கு கை விலை ரூ 0 - 5 - 0. வி - பி - மூலம் ரூ 0—7—0.

இப்படிக்கு,

☞ ஹக்கீம் பா - முகம்மது அப்துல்லா.

---

கடவுள் துணை.

# தன்வந்திரி

## சூக்ஷம வைத்தியம் - உ௱.

காப்பு.

நேரிசை வெண்பா.

ஆதியந்த மில்லா வகண்டபரி பூரணமாய்ச்
சோதியந்த வாழ்மயிலே சொற்பெரிய-யாதிபைகேள்
'நாதியநத மான நல்ல சரஸ்பதியை
வாதியந்தன் பங்கிலுறை வாழ்வே.

இதுவுமது.

வாழ்வென்ன வல்லபையின் வளர்முகத்தின் கணபதியைத், தாழ்வென்ன மணிவிளக்கின் சொல்பெரிய-வாழ்மறையின், ஆதியென்ன நான்முகவன் நல்லதொரு பிரமனவன், காதியென் னுவிற் கணக்கே.

நூல்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கணக்கென்ன வயிரவன்றன் பாதங் காப்பு
கனமான நந்தீசர் பாதங் காப்பு
வணக்கென்னு ரவிமதியின் பாதங் காப்பு
வானான சதாசிவத்தின் பாதங் காப்பு

அணக்கென்ன நாதாக்கள் பாதங் காப்பு
ஆனதொரு சற்குருவின் பாதங் காப்பு
மணக்கென்ன தேவிசிவ காமி வாலை
மகத்தான தேவியம்பாள் பாதங் காப்பே.

காப்பென்ற நந்தீச ரவரி டத்தே
கனிந்தடுத்துப் பணிவிடைகள் மிகவே செய்தே
வாப்பென்ற வென்குணத்தை யறிந்தா ரைய [ன்
வளமாக வெனையழைத்தார் முன்னே நின்றே
மாப்பென்ற வமுதமதை யூட்டி னார்பா
ரன்பான மூமைதனைக் காதிற் சொன்னார்
நாப்பென்ற வமுதரசங் கனிய லாச்சு
நலமான சகலசித்து நினைவி லாச்சே. (உ)

ஆச்சப்பா வூமையனை நிகண்டிற் சொன்னேன்
அன்பான வாசிமர்ம மெல்லாஞ் சொன்னேன்
வாச்சப்பா மூன்றுலட்சம் பாட லெல்லாம்
வளமாக நிகண்டிலே சொன்னேன் பாரு
நாச்சப்பா வைத்தியத்திற் காதி கேளு
நலமான வட்டாங்க வயிரவன்று னையா
காச்சப்பா வவன்பூசை வேண்டும் பாரு
கனமான பூசையைத்தான் சொல்வேன் கேளே.

கேளப்பா ரங்கெனவும் டிங்குடிங் கென்றும்
கெடியான மங்கெனவும் நங்கென் றேசொல்
வாளப்பா வயிரவருக் கிம்மூ லந்தான்
வளமான லட்சமுருப் போட்டுக் கொள்ளு
ஆளப்பா வுன்னிடத்திற் குடியி ருப்பா
ரன்பான சக்கரத்தைச் சொல்லக் கேளு
நாளப்பா வறையைந்து கீறிக் கொண்டு
நலமாகக் குறுக்கஞ்சா மறையுங் கீறே. (ஈ)

கீறவே சுற்றினுந்தான் சூலம் போடு
கிருபையாற் பீசங்கள் சொல்லக் கேளு
வாறவே யுற்றிரத்தில் அங்பிங் மங்
வானதொரு சிங்கென்றும் போடு வாய்நீ
மாறவே தெக்ஷணத்திற் சொல்லக் கேளு
மகத்தான ரங்கென்றும் ரிங்கென் றுந்தான்
நாறவே சிங்கென்றும் வங்கென் றுந்தான்
நல்மாகக் கிழக்குநிலை சொல்லக் கேளே. (ரு)

கேளப்பா கிழக்கினிலே வகோயாவென்று போடு
கெணிதமுடன் மேற்கேதான் சொல்லக் கேளு
வாளப்பா வறிம் இறிம் என்று போடு
வளமான ஆமென்றும் ஊமென் றுந்தான்
நாளப்பா நாற்சது ரமாகிப்போச்சு
நலமான வுள்ளறையி னுட்டங் கேளு
தாளப்பா விரண்டிற்கு நடுவிற் பாரு
தனமான வீடதிலே சொல்லு வேனே. (சா)

சொல்லவே ராவென்ற வக்ஷரத்தைப் போடு
சொற்பெரிய நடுவெழுத்து லாவென்று போடு
அல்லவே கீழ்மேலாய்ச் சுழியைச் சுற்று
அப்பனே சுழிமுனையிற் சூலம் போடு
நல்லவே சூலத்தில் ரீங்காரம் போடு
நலமாக இம்மென் றும் நடுவிற் போடு
வல்லவே ஊமையெழுத் திதுதான் பாரு
வளமான வடமொழியிற் றிறந்திட் டேனே. (எ)

திறக்கவே விவ்விதமாய்ச் செடத்தி லுண்டு
தெரியாத மூடர்களை யிருத்திப் பாரு
வார்க்கவே சக்கரத்தைப் போட்டுக் கொண்டு
வளமாக உத்தரத்தின் முகமாய்க் குந்து

ஆர்க்கவே பாயாசம் பலகா ரங்க
ளப்பனே தூபமொடு தீபங் காட்டு
நார்க்கவே நாற்பத்தி னைந்துக் குள்ளே
நலமாகச் சித்திப்பா நவின்று பாரே. (அ)

நவிலவே சித்தித்தாற் கரும நோய்க
ணலமாக வுன்முகத்தைக் கண்ட போதே
தவிலவே யோடிவிடும் நோய்கள் பாரு
தாரணியிற் பிணிகளுனைக் கண்டு தானல்
வவிலவே சிம்மந்தான் வருகு தென்று
வளமாக வோடிவிடும் வல்ல நோய்கள்
கவிலவே வடமொழியைக் கண்டா ரானல்
கருவான வுலகத்திற் சித்தி யாமே. (௯)

சித்தனைச் சடமெடுத்தா லெல்லாஞ் சித்தி
சிறப்பான மற்றோர்க்குச் சித்தியாமோ
வத்தனைப் மூன்றெழுத்து ஊமை தாண்டா
வப்பனே யஞ்செழுத்து ஊமை யாலே
யத்தனை யெட்டெழுத்து ஊமை யாலே
யதையடுத்த வைம்பத்தோ ரக்ஷரமு மூமை
பத்தனை யிருந்தோருக் கெல்லாஞ் சித்தி
பரிவான வாதத்திற் கெடுவரர் பாரே. (௧0)

பாரெனவே ஞானத்தைப் பார்க்கா மூடர்
பர்வமான பாவத்தைச் செய்வாரையா
ஆரெனவே ஞானமொடு வைத்தியம் யோகம்
அப்பனே பார்த்தாக்காற் பாவ மாமோ
நாரெனவே யொன்றுமில்லை யேது மில்லை
நலமான வாறுபத்து நாலுஞ் சொல்வார்
வாரெனவே வனபூத மோடிப் போகும்
வளமான கன்மத்தா லாட லாச்சே. (௧௧)

ஆச்சென்ற யோகத்தைப் பாரா னாகில்
அப்பனே வாதமொடு ஞானஞ் சித்தி
வாச்சென்ற வாதத்தா லென்ன வாகும்
வளமான ஞானத்தைப் பாரு பாரு
நாச்சென்ற ஞானத்தை யறிந்தா ரானால்
நலமான சிவயோகப் பதவி யாவார்
நீச்சிசின்ற பொருளறிந்தோன் சித்தன் சித்தன்
நிலையான மனத்தோர்க்குச் சித்தியாமே. (கஉ)

வழலை.

சித்தென்ன வூமையனைத் தெரிந்து சொன்னேன்
சிறப்பான வழலையுட மார்க்கங் கேளு
வத்தென்ன வைத்தியத்தின் வழலை கேளு
மன்பான பூமியுட நாத மப்பா
சுத்தனா யிருந்தாக்காற் சொல்வேன் பாரு
சொற்பெரிய வுவருப்பைக் கொண்டு வந்து
நற்றென்ன படியொன்று அளந்து கொண்டு
நலமான பாண்டத்திற் கொட்டிப் பாரே. (கங)

வழலைமுப்பு விபரம்.

பாரப்பா பனிநீரைக் கொண்டு வந்து
பரிவாக விரண்டுபடி யதனில் வார்த்து
சேரப்பா கலக்கியே யடுப்பி லேற்றிச்
சிறப்பான குழம்புபோ லாகும் யோசி
வாரப்பா விறக்கியதை வைத்துக் கொண்டு
வளமாக வாறிவரும் பதத்தைக் கேளு
சீரப்பா பீங்கான்று னகலமாகச்
செப்பமுடன் கொண்டுவந் ததனி லூற்றே. (கச)

ஊற்றியதோர் பீங்கானை யில்லத் தில்லை
　　உணர்வான வாலேயைத்தான் லட்ச மோது
வாத்தியதோர் நைவேத்தியம் தூபங் காட்டு
　　வனமான பால்பழங்கள் வைத்து வைத்து
நாத்தியதோர் நாற்பதுநாட் சென்று தானல்
　　நலமான பூப்பூத்துக் காய்க்கும்பாரு
மாற்றியதோ ரஞ்சுநா ளானபின்பு
　　வளமான காய்காய்த்துப் பழமாம் பாரே. (௧௫)

பழமாகு நாற்பத்தினைந்துக் குள்ளே
　　பரிவாகப் பூவெடுத்துப் பதனம் பண்ணு
வளமாகும் தூபமொடு தீபங் காட்டி
　　வப்பனே வைத்தியமுப் பிதுதான் பாரு
நழமாகும் முப்பூவின் சுண்ணங் கேளு
　　நலமான கல்வத்தில் முப்பூ விட்டு
கழமாகும் குக்குடத்தி லண்டம் வாங்கி
　　கனமாகப் பிளந்ததிலே * விந்தை வாரேன். ().

வாரப்பா சாமமது ஒன்று மட்டும்
　　வளமான பனிநீராற் சாம மாட்டு
ஆரப்பா வில்லைசெய்து நிழ லுலர்த்தி
　　யப்பனே விந்துவினு லேழு சீலே
நாரப்பா யாறவைத்துக் கோழிபுடம் போடு
　　நலமாகச் சுண்ணமதாய் வெண்ணீ ராகும்
காரப்பா சுண்ணமதை யெடுத்துக் கொண்டு
　　கருவாக வயிரவர்க்குப் பூசை பண்ணே. (௧௭)

---

* விந்து—வெண்கரு.

பண்ணவே குப்பிதனிற் பதனம் பண்ணு
பண்பான வவுடதத்தின் கூடச் சேரு
வண்ணவே யாக்கிராணங் கலிக்கத் தோடு
வருத்தவிந்தக் கட்டுவகை செயநீர்ப் போக்கு
மெண்ணவே சிந்தூரம் பற்பத்தோடு
மேவான மாத்திரைக ளெண்ணெ யோடும்
கன்னிவே தைலமொடு சூரணங்கள்
கனமான லேகியங்கள் கிருதந் தானே. (கஅ)

தானான ஞானமொடு வாதப் போக்கு
தனதான தீக்ஷயொடு சமாதி தானும்
வானான கருக்கிடைசூட் சத்திற் சொல்வேன்
வளமான வடமொழிதா னிந்நூல் பாரு
மானான காயாதி கற்பத்தோடு
மகத்தான மந்திரஞ்சக் கரங்கள் தானும்
தேனான வகத்தீசர் கடாக்ஷத் தாலே
திறமாக விரித்துயான் சொல்வேன் பாரே. ()

சுரமாத்திரை.

சொல்லவே மாத்திரைதா னென்று கேளு
சுளுவான வாளமது பலந்தா னென்று
மெல்லவே பூரங்கா லழிஞ்சிவேர்ப் பட்டை
மேலான கொடிவேலிப் பட்டை காலாம்
வல்லவே யிதுவெல்லாஞ் சுத்தி பண்ணி
யப்பனே கல்வத்திற் போட்டே யாட்டு
வெல்லவே முலைப்பாலாற் சாமம் ரெண்டு
வேதாந்தக் கையானிற் சாமம் ரெண்டு. (உ0)

ரெண்டான நாற்சாம மரைத்துக் கொண்டு
        ரேசகரும் பகமுடனே பூசை பண்ணு
வண்டான துவரைபோல் மாத்திரைதான் பண்ணு
        வளமாக வுலர்த்திநன்றாய்ச் செப்பில் வைத்து
கண்டாளத் தேனிலே கொடுத்துப் பாரு
        கைகடந்த சுரமெல்லா மோடிப் போகும்
மண்டான சுரமாந்த மாத்திரைதா னப்பா
        வாகாதோ ரிம்மருந்தைச் செய்து கொள்ளே. ()

## குங்குமப்பூ மாத்திரை.

கொள்ளவே குங்குமத்தின் குளிகை கேளு
        கொடிதான குங்குமப்பூ பலந்தா னொன்று
மள்ளவே திரிகடுகு திரி பலாதி
        மகத்தான சாதிக்காய் கிராம்பு ஏலம்
விள்ளவே சந்தனத்தூள் மருதம் வேரும்
        விதமான கடுகுரோ கணியுங் கூட்டு
உள்ளவே யிதுவெல்லா மரைதான் கூட்டு
        இயல்பான கல்வத்திற் போட்டுக் கொள்ளே. ()

கொள்ளென்ற பழச்சாறு தான்சாம மொன்று
        கொடியான விஞ்சிச்சாறு சாமம் ரெண்டு
வாளென்ற கண்டங்கத் திரிப்பழச் சாறுசாமம்
        வளமாக வரைத்ததனை வழித்தெடுத்து
தாளென்ற சிறுபயறுபோற் குளிகை செய்து
        தப்பாம லுலர்ந்தபின்பு செப்பில் வைநீ
மாளென்ற வனுபான மறிந்து செய்தால்
        மகத்தான குளிர்சன்னி சுரங்கள் போமே. (உ௬.)

## வயிரவ மாத்திரை.

போமென்ற வயிரவமாத் திரைதான் கேளு
புகழான லிங்கமொடு நாபி கந்தி
வாமென்ற வெண்காரம் நவச்சாரம் வீரம்
வளமாகு மிதுவெல்லாம் விராகன் ரெண்டு
சாமென்ற சுத்திசெய்து கல்வத் திட்டுக்
கனமான லவங்கமொடு பத்திரியுஞ் சுக்கு
மாமென்ற கையானில் ரெண்டு சாமம்
அப்பனே மங்கையர்தன் பாலால் ரெண்டே. ()

ரெண்டான குமரிச்சாறு சாமம் ரெண்டு
ரேசித்து வழித்ததனை யரைத்தெடுத்து
வண்டான பணிப்பயறுபோல் மாத்திரை செய்து
அப்பனே ரவிதனிலே யுலர்த்திக் கொண்டு
அண்டான மனிதருக்கே யனுபானத்தில்
அளவாக மாட்டிடவே சொல்லக் கேளு
தண்டாக சுழற்சன்னி சிலேஷ்ம சன்னி
கனமான சுரங்கள்முதற் குளுமை போமே. ()

## சஞ்சீவி மாத்திரை.

போமப்பா சஞ்சீவி மாத்திரைதான் கேளு
புகழான நாபியொடு சூதம் லிங்கம்
வாமப்பா வரிதாரம் பூரங் கெந்தி
வளமான ரசத்தினுட செந்தூரங் கூட்டு
காமப்பா சுத்திசெய்து இதுவெல் லாந்தான்
கனமான பலமரைதான் கல்வத் திட்டு
நாமப்பா கிராம்புடனே பத்திரியு மேலம்
நல்மான திரிகடுகு திரிபலாதி யென்னே. ()

என்னவே நேர்வாளஞ் சுத்தி பண்ணி
யியல்பாக மருந்தெல்லாங் கூடச்சேரு
வண்ணவே நிம்பக்காய்ச் சாறதாற் சாமம்
வளமான கன்னிப்பால் சாமம் ரெண்டு
மன்னவே குமரிச்சாறு சாமம் நாலு
மகத்தான கொன்றைபட்டை சாறுதான் சாமம்
அண்ணவே சாமமது எட்டு மாட்டி
அப்பனே மாத்திரைதா னதின்பின் செய்யே.()

செய்யவே யனுப்பான மறிந்து செய்தாற்
செயலான சன்னியொடு சுரங்கள் தோஷம்
மையலே மாண்டுவிடும் நோய்க ளெல்லா
மகத்தான பால்தேனிற் கொள்ளும் போது
வையப்பா செற்றபிண மெழுந்து குந்தும்
வளமான விதியிருந்தாற் பிழைப்பா னப்பா
கையவே விதியில்லா விட்டாக் காற்றுன்
கனமான முன்றரைநா ழிகைக்குட் போமே. ()

போமப்பா விம்முறைபோ லார்தான் சொல்வார்
புகழ்கிரந்தி யேழுக்குமிம் முறைதா னப்பா
வாமப்பா நந்தீச ரருடன் னூலே
வழிதுறையாய் மாத்திரையைவழுத்திவிட்டேன்
காமப்பா கிரந்தியி லே ஏழுக்குந் தான்
கனமான மாத்திரைதா னென்று சொல்வேன்
நாமபபா பூரமுடன் கந்திசேரு
நலமான கருஞ்சீர கந்தான் சேரே. (உகூ)

## கிரந்தி மாத்திரை.

சேரப்பா பறங்கிச்சக்கை யிதுமூன் றுந்தான்
செயலாகச் சுத்திபண்ணிக் கல்வத் திட்டு

வாரப்பா சீரகமும் போட்டுக் கொண்டு
வளமான கையான்சா றதனு லாட்டே
பாரப்பா தாணிக்காய்போ லுண்டை செய்து
பண்பாக வெடுத்து நன்ருய் நோய்கள்தீர
நாரப்பா நசித்துவிட்டு உதிர்ந்து போகும்
நலமான பத்தியந்தான் உப்புப்புளி தள்ளே.

தள்ளவே யரைக்கீரை புரட்டிப் போடு
தனதான முருங்கக்காய் கத்திரியுங் கூட்டு
விள்ளவே யுப்பைத்தான் வறுத்துக் கூட்டு
விதமான மாத்திரையை விழுங்கச் சொல்லு
நள்ளவே கிரந்தியது தவறுண்டே போம்
நலமான மாத்திரைதான் நன்மை நன்மை
அள்ளவே கலிக்கத்தின் மாத்திரைதான் கேளு
அப்பனே வெண்கார நாபி கூட்டே. (௩௧)

## அமுர்தாதி கலிக்க மாத்திரை.

கூட்டவே வெண்மிளகு வாளங் கூட்டு
கூருக விதுவெல்லாஞ் சுத்தி பண்ணி
ஆட்டவே வகைக்கியொரு கழஞ்சி கூட்டு
ஆனதொரு திரிகடுகு கூடச் சேரு
வாட்டவே கல்வத்திற் போட்டுக் கொண்டு
வளமான பழஞ்சாற்றில் சாம மூன்று
காட்டவே கன்னிமுலைப் பாலாற் சாமம்
கருத்தான வெற்றிலைச்சாறு சாமம் நாலே. ()

நாலான வெற்றிலைச்சா றதனிற் போட்டு
நாதாந்த வவுடதங்கேள் சன்னி போகும்
சாலான முலைப்பாலிற் போட்டிட் டாக்காற்
சமர்த்தான குளிருடனே சுரமும் போகும்

மாலான வமுர்தாதிக் கலிக்கஞ் சொன்னேன்
அப்பனே சன்னியுட மாத்திரைதான்கேளு
மேலான முத்தமொடு வெடியுப்-போடும்
மென்மேலும் பூரமுடன் கெவுரி கூட்டே. (௩௩)

சன்னி மாத்திரை.

கூட்டப்பா வதிமதுர மக்கிர காரம்
குணமான கஞ்சாவுங் கர்க்கடக சிங்கி
வாட்டப்பா முச்சரக்குச் சுத்தி செய்து
வளமான மருந்தெல்லாங் கல்வத் திட்டு
காட்டப்பா வெலுமிச்சம் பழச்சாறு சாமம்
கனமான இஞ்சிநீர் சாமம் நாலு
ஆட்டப்பா முலைப்பாலில் சாம மாட்டு
அப்பனேயாட்டினபின் மாத்திரைதான்செய்யே.

செய்யப்பா விதற்கெல்லா முப்பூ போடு
செயமான பூபோட்டால் சரக்கே கொல்லும்
வையப்பா வோருரைப்பூ தேனிற் கொள்ளு
வளமான சன்னிபதின் மூன்று போகும்
மையப்பா வனுப்பான மறிந்து கொள்ளு
மானதொரு விடசன்னி தோடம் போகும்
கையப்பா வேழையுந்தான் வைத்தியஞ் செய்வான்
கருதியதோர் குளிகையது வளமுடதாமே. (௩௫)

ஆமென்ற மாத்திரைதா னிதுதான் பாரு
மன்பான வைத்தியரே யுங்களுக்கு
நாமென்ற வாணுவத்தாற் சொல்லி விட்டோம்
நலமான கருக்களெல்லா மிதிலே சொல்வேன்

யாமென்ற மேகமதிருபத் தொன்றும்
அப்பனே மேகத்தால் எழுந்த ரோகம்
தாமென்ற க்ஷயமெட்டு நீரிழிவு மெட்டுந்
தாக்கான சூலையது பதினெட் டாமே. (நுசு)

மேக ராஜாங்க எண்ணெய்.

ஆமப்பா மேகத்தா லெழுந்த ரோக
மானதொரு வியாதியைத்தான் சொல்லக் கேளு
காமப்பா மேகரா சாங்கத் தெண்ணெய்
கருவாகச் சொல்லுகிறேன் கேளு கேளு
வாமப்பா கருங்கையாந் தகரைச்சாறு படியொன்று
வளமான சங்கஞ்சாறு படிதா னொன்று
தாமப்பா கருநொச்சிச் சாறுபடி யொன்று
தருவான விசைவல்லிச் சாறுபடி யொன்றே. ()

ஒன்றான கோவைச்சாறு படிதா னொன்று
உத்தமனே நெல்லிக்காய்ச் சாறுபடி யொன்று
வன்றான வாகைச்சாறு படிதா னொன்று
வளமான தழுதாழைச் சாறுபடி யொன்றே
கன்றான கருப்பஞ்சாறு படிதா னொன்று
கனமான வாவாரைச் சாறுபடி யொன்று
அன்றான வத்திப்பால் படியரைதா னப்பா
அப்பனே யரைக்கீரைச் சாறுபடி யொன்றே.()

ஒன்றான தக்காளிச் சாறுபடி யொன்று
உத்தமனே குமரிச்சாறு படிதா னொன்று
ஒன்றான கன்னிமுலைப் பால்படிதா னொன்று
ஓதுவோம் வெள்ளாட்டுப் பால்படிதானொன்று

ஒன்றான வாவின்பால் படிதா னென்று
உகந்ததென்னம் பாளைச்சாறு படிகா னென்று
ஒன்றான ஒதிவிருக்ஷ சாறுபடி யொன்று
உறுதியுள்ள லிச்சிச்சாறு படிதா னென்றே. ()

ஒன்றப்பா கழுதைப்பால் படிதா னென்று
உத்தமனே சித்தேரண்டத் தெண்ணெய்ரெண்டு
வன்றப்பா வெள்ளெண்ணெய் படிதா னென்று
வளமான கற்கவகை சொல்லக் கேளு
கன்றப்பா திரிகடுகு திரிபலாதி
கனமான வேலமொடு கிராம்பு பத்திரி
நன்றப்பா வெட்டிவேர் விலாமிச்சம வேரு
நாதாந்தச் சந்தனத்தூள் தேவதாரந் தானே. ()

தானான விவையெல்லாந் தேங்காய்ப் பாலில்
தனதாக வரைத்தெண்ணெய திற்கரைத்து
வேனான சாறுவகை யெண்ணெய் கற்கம்
வேதாந்த சட்டிதனிற் கலக்கிக் கொண்டு
வானான வடுப்பேற்றித் தீயைமூட்டி
வளமான சாமமது பனிரெண் டப்பா
கானான சாமமது எரித்துக் கொண்டு
கனகமதி யிறக்கியதைப் பதியில் வையே. (சக)

வையப்பா வெண்ணெய்தனை வடித்துக் கொண்டு
வளமான வயிரவர்க்குப் பூசை பண்ணிக்
கையப்பா கரண்டிநிறை நாற்பதுநாட் கொள்ளக்
கனமான மேகமெலாந் தவறுண் டேபோம்
மையப்பா வாத க்ஷயம் பித்த மெல்லா
மகத்தான சிலேஷ்மக்ஷய மெலலாம் போகும்
நையப்பா கர்மவினை மேக ரோகம்
நலமாகப் பறந்துவிடும் கன்ம நோயே. (சஉ)

## வாத ராஜாங்க எண்ணெய்.

நோயான் வகையேது கர்மத் தாலே
நோயான கர்மத்தால் வந்த நோய்தான்
வாயான வாதரா சாங்கங் கேளு
வளமான வெண்ணெயப்பாயார் தான்சொல்வார்
நாயான உள்ளபடி நான்தான் சொன்னேன்
நலமான வழிவாலே கண்டு செய்வாய்
காயான கனிபழம்போ லென்னு லப்பா
கருவாக விருநூற்றிற் சொல்வேன் பாரே. (சஙு)

பாரப்பா கண்டங்கத்திரிச் சாறுபடிதா னென்று
பரிவான மிளகரணைச்சாறு படிதா னென்று
காரப்பா வாகைச்சாறு படிதா னென்று
கனமான மாவிலிங்கம் படியரைதா னப்பா
வாரப்பா கொன்றைச்சாறு படிதா னென்று
அப்பனே வெள்ளறுகுச் சாறுபடி யொன்று
நாரப்பா வாதநாராயண மூலிச்சாறு
நலமான படியொன்று கூடச் சேரே. (சச)

சேரப்பா விதுகளுடன் கனல்தான் போக
செயமான வெள்ளாட்டுப் பால்படிதான் கூட்டு
நாரப்பா கற்கவகை சொல்லக்கேளு
நலமான முருங்கைவேர் சங்கின்வேரும்
மாரப்பா கொடிவேலி வேருங் கூட்டி
அப்பனே வெள்ளறுகு வேருங் கூட்டி
காரப்பா திப்பிலியுஞ் சுக்கு ஓமம்
கருவான கருஞ்சீர கம்முங் கூட்டே. (சரு)

கூட்டப்பா காயுடனே கிராம்பு பத்திரி
குருவான லிவ்வகைக்கு விராகன் ரெண்டு
வாட்டப்பா முன்கற்க வகைக்கு மைந்தா
வளமான பலமரைதான் கல்வத்திட்டு
ஆட்டப்பா வேறுவகைக் கடைச்சரக் கெல்லாம்
அப்பனே வெள்ளாட்டின் பாலா லாட்டி
நாட்டப்பா வேரண்டத் தெண்ணெய்ப்படி யென்று
நலமான சாறுஎண்ணெய் கற்கஞ் சேரே. (சகூ)

சேர்த்தப்பா சட்டிதனில் வார்த்துக் கொண்டு
செயலான கற்கத்தைக் கலக்கிக் கொண்டு
வார்த்தப்பா வடுப்பேற்றிச் சாம மஞ்சு
வளமாகக்காய்ந் துகடுகுந் திரளும் பாரு
ஏற்றப்பா மெழுகுபதந் தனில் வடித்து
இதமாக வயிரவர்க்குப் பூசை பண்ணு
கார்த்தப்பா வெண்ணெயைக் காசிடைதான் கொள்ள
கனமான வாதமெண் பதுவும் போமே. (சஎ)

போமப்பா நாற்பதுநாட் கொள்ளு கொள்ளு
புகழான பத்தியந்தான் காரு காரு
வாமப்பா வாதமெண் பத்தி நாலால்
வந்திடுமா வல்வினையைக் கேளு கேளு
காமப்பா கழுத்திசுவு மண்டைக் குத்து
கனமான கால்கைக ளுடம்புக் குத்து
நாமப்பா முன்னிசுவு பின்னிசுவு வாய்வு
நலமான கழல்வாத மண்டவாதம் பாரே. ()

பாரப்பா நடுக்குமுதல் வாதந் தீரும்
பரிவான விடுப்புநோ யிதினாற் போகும்
மாரப்பா கைகாலில் திமிர்த்த வாய்வு
அப்பனே கைமுடக்குக் கால்முடக்குத் தீரும்

ஊரப்பா வெண்பதிநா லால்வளர்ந்த தெல்லாம்
வளமாகப்பொடிப்பொடியாய்ப் பறந்துபோகும்
நாரப்பா விந்தவெண்ணெய் பத்தியங்கார்
நலமாக வந்திடமும் குணமும் பாரே. (சகூ)

பாரென்ற கண்பார்த்து முகத்தைப் பார்த்துப்
பரிவாக வவனுடைய பலத்தைப் பார்த்து
வாரென்ற வியாதியுட பலத்தைப் பார்த்து
அப்பனே நாடியுட பலத்தைப் பாரு
ஏரென்ற விதுகளெல்லா மறிந்து பாரு
என்மகனே குணம்பார்க்கா மூடர் தானும்
நாரென்ற னுபகில்விழுந் தழுவர் பாரு
நலமின்றித் துரிதமுடன் சினஞ் செய்வானே.

## நாடி விபரம்.

வானென்ற நாடிதானெல் லாருஞ் சொல்லார்
வளமான வேனகதி சொன்னா ரையா
தானென்ற நான்கேட்டுப் பன்னீ ராயிரத்திற்
றயவாகக் குருடனுக்குந் தெரியச் சொன்னேன்
பானென்ற வடமொழியார் காணப் போறார்
பரிவான வென்னூல்போற் சொன்னா ரையா
தேனென்று உள்ளபடி தெரியச் சொன்னேன்
தெளிவான வறிவுள்ளோர் தெரிவார் பாரே. ()

## முடக்குவாதத் தைலம்.

பாரான முடக்குவாதம் நடுக்குவாதந் தீரப்
பரிவான தைலமொன்று சொல்லக் கேளு
வாரான எண்ணெய்ப்படி கால்தான் வாங்கி
அப்பனே வாகைச்சாறு காற்படிதான் கூட்டு

பாரான தில்லம்பால் படி யரைக்கால்
பண்பான முருங்கைவேர் சாறுபடி யரைக்கால்
நாரான கற்கவகை சொல்லக் கேளு
நமைான கறியுப்பு இந்துப் பாச்சே. (௫௨)

இந்தான வெள்ளுள்ளி காயங் கூட்டி
யிதமான மாவிலிங்கம் வேர் சித்திரமூலம்
வந்தான வசம்புடனே திப்பிலியுங் கூட்டி
வளமாக வரைத்தெண்ணெய் தனிற் கரைத்து
கந்தான வடுப்பேற்றி நீர்சுண்டக் காய்ச்சிக்
கனமான நோய்க்கெல்லாந் தடவிப் போடு
தந்தான நிமிஷத்தில்நோய் வீக்கம் வாங்கும்
தானதொரு நடுக்குடனே திமிரும் போமே. ()

கரப்பான் எண்ணெய்.

போமப்பா விதுவிரண்டுஞ் செய் திருந்தாற்
பொல்லாத பிணிவாய்வு தீரும் பாரு
வாமப்பா வழியாகச் சொல்லி விட்டேன்
வளமான வைத்தியரே யறிந்து செய்வீர்
காமப்பா கரப்பனெல்லாந் தீரு தற்குக்
கனமான வெண்ணெயொன்று சொல்லக் கேளு
நாமப்பா வெண்ணெய்படி முக்கால் வாங்கி
நலமான சீனிச்சாறு கூந்தற் சாறே. (௫௪)

சாரான செருப்படிச்சாறு கருநொச்சிச்சாறு
சமர்த்தான கிரந்திநா யகத்தின் சாறு
வாரான சங்கஞ்சாறு சாரணையின் சாறு
வளமான வெள்ள றுகுச் சாறு கூட்டு

நாரான விதுவெல்லாங் கூடச் சேரு
    நலமான வகைக்குப்படி கால்தான் கூட்டு
பாரான் கற்கவகை சொல்லக் கேளு
    அப்பனே சீரகந்தா னிரண்டு கூட்டே. (ருரு)

கூட்டப்பா கடுகுரோ கணியுங் கூட்டு
    கூறான வாதகரப்பான் பட்டை கூட்டு
வாட்டடா கண்டங்கத் திரியுங் கூட்டு
    வளமான யானையுட நெருஞ்சி கூட்டு
சாட்டடா வேம்பாட மரத்தை சுக்கு
    கனமான பறங்கிச்சக்கை குமிழம் வேரே
நாட்டடா விதுவெல்லாந் தூளாய்ப் பண்ணி
    நலமான வகைக்கு அரைப் பலந்தான் சேரே. ()

சேரடா வெண்ணெய்தனிற் கலக்கிக் கொண்டு
    சிறப்பாக நேர்வாளம் பலமரைதான் பொடித்து
வாரடா நீர்சுண்டக் காய்ச்சிக் கொண்டு [போடு
    வளமான மெழுகுபதந் தன்னைப் பாரு
காரடா விறக்கியதை வடித்துக் கொண்டு
    கனகமதை நாற்பதுநாட் கொள்ளச் சொல்லு
நாரடா பத்தியந்தா னிச்சா பத்தியம்
    நலமாகக் கொண்டிடவே தீரு நோய்கேள். ()

கேளப்பா வீக்கமுடன் கொள்ளி சுட்டான்
    குறிப்பான வாதசிலேஷ்ம கரப் பான்
வாளப்பா பித்தத்தால் எழுந்த பீடை
    வளமான செங்கரப்பான் சொறிக ரப்பான்
ஆளப்பா லிங்கப்புற்று யோனிப்புற்று
    அப்பனே கிரந்திவலி கொறுக்கை புண்ணு
நாளப்பா பித்தத்தா லெழுந்த தேமல்
    நலமான வெடிகிரந்தி யிதுவெல்லாம் போமே

## மேகத்தேண்ணேய்.

போமப்பா மேகத்தி னெண்ணெய் கேளு
புகழான வத்திப்பால் காற்படிதா னப்பா
வாமப்பா செவ்விளநீர் தேங்காய்ப் பாலும்
வளமான பனைமரத்தின் நொங்கினீரும்
ஆமப்பா-வொதியம்பட்டைச் சாறு கூட்டு
அப்பனே யாவின்பா லாவி னெய்யும்
காமப்பா வெண்ணெய்படி யொன்றரையுங் கூட்டு
கனமான வகையெல்லாம் படிமுக்கால் கூட்டே

கூட்டப்பா கற்கவகை சொல்லக் கேளு
குணமான முல்லைவேர் குமிழம்வேரும்
வாட்டப்பா கொடிவேலி வேருங் கூட்டு
வளமான சாதிக்காய் கிராம்பு ஏலம்
நாட்டப்பா பத்திரியுந் தாளிசந்தான்
நலமான கோரோசனை சந்தனத் தூள்
ஆட்டப்பா வெட்டிவேர் விலாமிச்சம் வேரும்
அப்பனே யாவின்பால் தன்னு லாட்டே. ()

ஆட்டவே யெண்ணெய்ப்பால் தனிற் கரைத்து
அப்பனே யடுப்பேற்றித் தீயை மூட்டி
காட்டவே மெழுகுபதந் தன்னைப் பார்த்துக்
கனகமாய் வடித்ததனைப் பதனம் பண்ணு
மாட்டவே மண்டலந்தான் கரண்டி கொள்ளு
மகத்தான வங்கபற்பம் போட்டுக் கொள்ளு
நாட்டவே நீரிழிவு குட்டஞ் சொறி யெல்லாம்
நலமாகப் பறந்துவிடுஞ் சலவை தானே. (சுக)

தானான வெண்ணெய்க்குப் பத்திய மந்தான்
தனதான புகையோடு பெண்ணு மாகா
வானான பாகற்காய் பூசணிக்காய்
வளமான கொள்ளுடனே யகத்திக் கீரை
தேனான வெள்ளெண்ணெயிது வெல்லா மாகா
திறமான பத்தியத்தின் பதார்த்தங் கூட்டு
வானான பெரும்பாட்டி னெண்ணெய் கேளு [சே. ()
அப்பனே வெள்ளெண்ணெய் படிமுக்கா லாச்

## பெரும்பாட் டெண்ணெய்.

ஆச்சப்பா நாவற்பட்டைச் சாறுபடி முக்கால்
அப்பனே ஓதியம்பட்டைச் சாறுபடி முக்கால்
வாச்சப்பா வத்திபட்டைச் சாறுபடி முக்கால்
வளமான நெல்லிக்காய்ச் சாறுபடி முக்கால்
நாச்சப்பா பழச்சாறு படிதான் முக்கால்
நலமான வாவிநெய் படிதான் முக்கால்
காச்சப்பா கருப்பஞ்சாறு முக்கால் கூட்டு
கனமான கற்கவகை சொல்லக் கேளே. (சுங)

கேளப்பா படிமுக்கால் தாளீ சந்தான்
கெடியான சாதிக்கா யேலங் கிராம்பு
வாளப்பர் வரத்தையொடு அதிமதுரங் கூட்டு
வளமான நிலப்பனைக் கிழங்குங் கூட்டு
ஆளப்பா வகைக்குப்பலங் கல்வத் திட்டே
அப்பனே தென்னங்காய்ப் பாலா லாட்டே
காளப்பா வெண்ணெயதிற் கலக்கிக் கொண்டு
கருவாக வடுப்பேற்றித் தீயைச் சாடே. (சுச)

சாடையிலே நீர்சுண்டி க்கடுதிரண் டால்
சமர்த்தான கைபாக மென்றறிந்து
வாடையிலே யெண்ணெ யதை யிறக்கிக் கொண்டு
வளமான வடுகனுக்குப் பூசை பண்ணிக்
கூடையிலே கரண்டிநிதங் கொண்டிட் டாக்காற்
குணமான பெரும்பாடு குடியோ டிப்போம்
நாடையிலே வெள்ளையொடு நீர்ச்சுருக்கு
நல்லநீர்க் கட்டுசதை யடைப்புப்போமே. (கரு)

போமென்ற தயிருபால் தன்னைக் கூட்டு
புகழான வுப்பைத்தான் வறுத்துக் கூட்டு
வாமென்ற மற்றதெலாந் தள்ளிப் போடு
அப்பனே யெண்ணெயுட மருத்து வந்தான்
ஆமென்ற புடத்தைல மகிமை கேளு
வளமான வெட்டிவித்துத் தைலஞ்சொல்வேன்
நாமென்ற வெட்டிவித்துப் படிதா னுன்கு
நலமான புங்கம் வித்து நான்கு சேரே. (கசு)

## எட்டிவித்துத் தைலம்.

சேரென்ற கூவிளத்தின் பழமாறு கூட்டு
செயமான விதுமூன் றும் புடத்தைலம் வாங்கி
வானென்ற மனிதருச்குக் கொடுத்தா யானல்
வளமான குட்டமுதற் பாண்டு தீரும்
பானென்ற தலைக்குத்தான் தேய்த்து மூழ்கு
அப்பனே பித்தச்சூடு மயிருதிர்தல் தீரும்
நானென்ற சொறிசிரங்கு யானைப் புண்ணு
நலமாக வோடிவிடும் நவின்றிட் டேனே. (கஎ)

## புங்கம்வித்துத் தைலம்.

நவிலுவே னின்னமொரு தைலங் கேளு
நலமான புங்கம்வித்துத் தைலஞ் சொல்வேன்
வலிவுவே புங்கம்வித்துப் படிதா னெட்டு
அப்பனே யழிஞ்சிவித்துப் படிதாவென்று
கவிலவே முல்லைவேர் வீசை ரெண்டு
கனமான குமரிவேர் வீசை யெட்டு
மவிலவே யிதுவெல்லாந்தான் பாண்டத் திட்டு
மகத்தான குழித்தைலந் தன்னை வாங்கே. (சுஅ)

வாங்கவே கடுகளவு உள்ளுக் கீந்து
வடிவாக மேலுக்குப் பூசிவா நீ
யாங்கவே நரைதிரைக ளிதனாற் போகும்
அப்பனே காயமது இறுகிப் போகும்
நாங்கவே பாண்டுடனே மேகம் போகும்
நலமான வித்தனையு மிதனாற் போகும்
சாங்கவே யின்னமொரு தைலங்கேளு
சமத்தான அறுகமவேர் தைலங் கேளே. (சுகூ)

## மூதண்டத் தைலம்.

கேளப்பா வறுகம்வேர் வீசை யெட்டுக்
கெடியான முற்றமது வீசை யெட்டு
ஆளப்பா புங்கம்வேர் வீசை யெட்டு
அப்பனே யிதுவெல்லாம் பாண்டத் திட்டு
வாளப்பா குழித்தைலந் தன்னை வாங்கி
வளமாகத் தைலத்தைப் பதனம் பண்ணி
நாளப்பா வுள்ளுக்குக் காசிடைதான் கொள்ள
நலமாகச் சிரசிற்கு முழுகு வாயே- (எ0)

முழுகிடவே தீருமது பித்த பாண்டு
முக்கியமுள்ள பித்த வெட்டை பித்தச்சூடு
வழுகிடவே சிரசுச்சூ டெல்லாந் தீரும்
வளமில்லா காதிரைச்சல் மண்டைக் குத்தல்
அழுகிடவே யுடம்பெரிவு கைகாற் காந்தல்
அப்பனே நெஞ்செரிவு மூக்கெரிச்சல்
பழுகிடவே புளிபுகையு மாகா தப்பா [செய்யே.(எக)
பண்பான பத்தியத்தைச் செவ்வையாச்

## வாளாயுதரணத் தைலம்.

செயப்பா வாளாயுத ரணத்திற் கெல்லாம்
செயமான தைலமொன்று சொல்லக் கேளு
வையப்பா சங்கம்வேர் வீசை ரெண்டு
வளமான பூவரசம் பட்டை ரெண்டு
கையப்பா சிவன்வேம்பு வீசை ரெண்டு
கனமான வாளுவை வீசை ரெண்டு
நையப்பா விவையெல்லாந் தரித்துக் கொண்டு
நலமான பாண்டத்திற் கொட்டி டாயே. (எ௨)

போடப்பா குழித்தைலந் தன்னைவாங்கிப்
புகழாகச் சீசாவிற் பதனம் பண்ணு
வாடப்பா மனிதருக்கு உள்ளுக்கிய
வளமாகப் பறந்துமே யோடிப் போகும்
நாட்டப்பா ரணத்தின்மேற் தைலம் போடு
கலமாகப் பறந்துவிடும் ரணங்கள் தானும்
மாட்டப்பா ரணமென்ற தெல்லாம் போகும்
அப்பனே பத்தியமா யிருப்பாய் தானே. (எ௩)

### க்ஷயத்துக்குத் தைலம்.

தானான ரெணத்தைலஞ் சொன்னே னப்பா
தய்வான க்ஷயத்துக்குத் தைலங் கேளு
தேனான செம்முள்ளி வேர்வீசை ரெண்டு
செய்யான சங்கம்வேர் வீசை ரெண்டு
நானான வாடாதோடை மூலிவேரும்
நலமான வீசையது ரெண்டுங் கூட்டி
வானான விதுமூன்றுங் குழித்தைலம் வாங்கி
வளமான தைலத்தைப் பதனம் பண்ணே. (எச)

பண்ணப்பா பணவெடைதான் கொள்ளச் சொல்லு
பரிவாக விருபொழுது உள்ளுக் கேற்று
சண்ணப்பா சஞ்சார சிலேஷ்பன ரோகம்
சமர்த்தான விளைப்போடு சுவாச காசம்
மண்ணப்பா மாண்டுவிடு மிருமல் ரெத்தம்
மகத்தான கொறுகொறுப்பு மேற்சு வாசம்
கண்ணப்பா கண்காணு தோடிப் போகும்
கனமான மேகத்தா லெழுந்த தாச்சே. (எரு)

### மூலச் சூட்டிற்குத் தைலம்.

ஆச்சப்பா வதினுடைய தைலஞ் சொன்னேன்
அப்பனே மூலச்சூ டெல்லாம் போக
வாச்சப்பா தைலமொன்று சொல்லக் கேளு
வளமான தைலமடா யாருஞ் சொல்லார்
மாச்சப்பா மிளகரணை முக்கத்தாரி
மகத்தான தென்னம்வேர் பனையின் வேரும்
காச்சப்பா கையானுங் கொழிஞ்சி வேரும்
கனமான விலந்தைவேர் முசுட்டை வேரே. ()

வேரப்பா கீழாநெல்லி சிற்றாமுட்டி
வேதாந்த நெல்லிப்பட்டை யானைப் பட்டை
காரப்பா விதுவெல்லாம் வீசை யொன்று
கனமான பாண்டத்தி லிட்டுக்கொண்டு
பாரப்பா குழித்தைலந் தன்னை வாங்கி
அப்பனே யடக்கமாய்ப் பதனம் பண்ணு
காரப்பா மனிதருக்குக் காசிடைதா னீந்தால்,
கனமான மூலமெல்லாம் பறந்து போமே. (எஎ)

## சகல வாதத்திற்குஞ் சூரணம்.

போமப்பா புடத்தைலப் பெருமை சொன்னேன்
புகழான சூரணத்தின் மகிமை கேளு
ஆமப்பா வாதமெலா மொழிந்து போக
அப்பனே சூரணந்தா னென்று சொல்வேன்
வாமப்பா கொன்றையொடு மாவிலிங்கம்
வளமான கொடுவேலி கண்டங் காலி
காமப்பா வாதத்தின் கரப்பான் பட்டை
கனமான தூதுவளைசங்கம் வேரே. (எஅ)

வேரான வெள்ளறுகு வேருங் கூட்டி
விதமான இதுவகைக்குப் பலந்தானைந்து
வாரான பூண்டுடனே காயஞ் சுக்கு
அப்பனே யிந்துப்பு வளைய லுப்பு
காரான கம்பியுப்பு கல்லுப்போடு
கனமான வுப்பெல்லாஞ் சுத்தி செய்து
நாரான வேரெல்லாங் கல்லுரலி லிட்டு
நலமான கடைச்சரக்குத் தூளாய்ப் பண்ணே.

பிண்ணவே யிரண்டுமொன்ருய்க் கலந்து கொண்டு
 பண்பான சூரணத்தைப் பதனம் பண்ணு
கண்ணவே வெருகடிதூள் உள்ளுக் கேற்று
 கனமான வாதத்தால் வந்த பீடை
வண்ணவே சூரணத்தைக் கண்ட போது
 அப்பனே காணும லோடிப் போகும்
விண்ணவே வாதத்தின் சூரணந்தான்
 விதமான க்ஷயத்துக்குச் சூரணந்தான் கேளே.

## க்ஷயமேகத்திற்குச் சூரணம்.

கேளப்பா செம்முள்ளி யாடா தோடை
 கெடியான சங்கொடு யீயவேரும்
வாளப்பா திரிகடுகு ஏலத்தோடு
 வளமான கண்டங்கத் திரிய ரத்தை
நாளப்பா கடுக்காயுஞ் சித்திர மூலம்
 நலமான கையானுந் தாளீ சந்தான்
ஆளப்பா இதுவெல்லாம் பலந்தா னென்று
 அப்பனே கல்லுரலில் தூளாய்த் தாக்கே. ()

தாக்கென்ற சூரணத்தை வடித்துக் கொண்டு
 சனதாகச் சீனியிது மூன்றுஞ் சேரு
வாக்கென்ற சூதமொடு தாள கந்தான்
 வளமான பற்பத்தி லெதுவா னாலும்
நாக்கென்ற பணவெடைதான் வைத்துக் கொள்ள
 நலமான க்ஷயகாச மீளை போகும்
மாக்கென்ற புகைபுளியும் பெண்ணுந் தள்ளு
 அப்பனே யரைக்கீரை துவரை தானே. (அஉ)

## தாளிசப் பத்திரிச் சூரணம்.

தானான * வரா வோலை யதற்குக் கூட்டுந்
தனதான மற்றதெல்லா மாகா தப்பா
வேணான வின்னமொரு சூரணந்தான் கேளு
வேதாந்த தாளீசப் பத்திரியின் சூரணந்தான்
காணான வேலமொன்று தாளீ சந்தான்
கருத்தான திரிகடுகு திரிப லாதி
யானான வேலமொடு கிராம்பு பத்திரி
அப்பனே யிதுவெல்லாம்பலமரைதான் கூட்டே
கூட்டவே யிடித்ததனை வடிகட்டிக் கொண்டு
கூறான சீனியதிற் பலமூன் றிட்டு
வாட்டவே வெருகடித்தா ளுள்ளுக் கேற்று
வளமான மூலத்திற் கடுப்பி ரத்தம்
மாட்டவே மூலத்தின் ரோக மெல்லாம்
மகத்தான வறட்சியொடு ரெத்த பாண்டு
நாட்டவே நீரடைப்புக் கல்ல டைப்பு
நலமான மேகவெள்ளை பறந்து போமே. (அச)

## பித்த சூரணம்.

போமப்பா வின்னமொரு சூரணந்தான்
பொற்பாக வேசொல்வேன் புகழாக் கேளு
வாமப்பா ஆவாரம் பட்டை வேரும்
வளமான ஓரிலைத்தாமரை கீழ்காய் நெல்லி
ஆமப்பா குமிழம்வேர் சிற்றாமுட்டி
அப்பனே யிலவ வேர்வேலி பாசி
சாமப்பா நரிப்பயற்றம் நன்னாரி வேரும்
கனமான விலாமிச்ச வேருங் கூட்டே. (அரு)

---

0வரா வோலை - ஓலை வாளை.

கூட்டப்பா எலுமிச்சை வேருங் கூட்டு
கூறான இதுவகைக்குப் பலந்தான் ரெண்டு
ஆட்டப்பா கடுக்காயு மேல மாஞ்சில்
அப்பனே சந்தனத்தூள் தேவ தாரம்
வாட்டப்பா விதுவெல்லா மரைதான் கூட்டு
வளமாக விடித்ததனை வடித்துக் கொள்ளு
காட்டப்பா சீனியுடன் சீரகமுங் கூட்டு [னே
காசினியி லாரறிவார் சூரணத்தின் போக்குந்தா

தானான சூரணத்தை யிருபோ துண்ண
தனதான பித்தெரிவு கண்புகைச்சல்
வானான பித்தத்தீ லெழுந்த தெல்லாம்
வளமாக மாண்டுவிடுஞ் சத்தியஞ் சொன்னேன்
கானான பீனிசங்க ளெல்லாம் போகும்
கனமான சூரணந்தா னென்று கேளு
மானான கடுக்காயுங் கடுகு ரோகணி
மகத்தான செண்பகப்பூ பெருமருந்து தானே.

பீனிசத்துக்குச் சூரணம்.

தானான திரிகடுகு செங்கத் தாரி
தனதான கொடுவேலி கண்டங் காலி
வானான சங்கம்வேர் சீரகந்தான் ரெண்டு
வளமான இதுவெல்லாம் பல மொன்றாக
கானான கஸ்தூரி யிடித்துக் கொண்டு
கனமாக எடுத்ததனை வடித்துக் கொள்ளு
நானான வெருகடித்து ளிருபோ துண்ண
நலமான வேழுநாட் கொள்ளு கொள்ளே.

கொள்ளப்பா மேசகுலை பீனிசங்கள்
கொடிதான நாசிரத்தம் நாசி நாற்றம்
வள்ளப்பா வுடம்பெல்லாந் தினவு குட்டம்
வளமான பொருமலுடன் விம்மல் வீக்கம்
கள்ளப்பா காதினுட சீழு நாற்றம்
கனமான பீனிசங்க ளெல்லாம் போகும்
அள்ளப்பா பீனிசத்தின் சூரணந்தான் சொன்னேன்
அப்பனே யின்னமுமொன் றருள்கின் றேனே.

## சண்டமாருதச் சூரணம்.

அருளுகின்றேன் மூலமது வொன்ப துக்கு
அடவாகச் சண்டமாருதச் சூரணந்தான் சொல்
வருளுகின்றேன் கொடிவேலி சுக்குங் கூட்டி [வேன்
வளமான மிளகரணை முத்தக் காசு
கருளுகின்றேன் கடுக்காயுங் கடுக்காய்ப் பூவுங்
கனமான யுளியாரை சிற்ற ரத்தை
மருளுகின்ற குங்குமப்பூ சாதிக்காயும்
மகத்தான பிரண்டையொடு கொழிஞ்சி வேரே.

வேரான சரக்கொன்றை வேருங் கூட்டி
வேதாந்தப் பச்சையொடு மாவேர்ப் பட்டை
யாரான விதுவெல்லா முலர்த்தித் தூளாய்
அப்பனே வகைக்குப்பல மிரண்டுவாங்கி
வாரான விதுவெல்லாம் ரேகித்துக் கொண்டு
வளமான சீனியதிற் கலந்து கொள்ளு
நாரான விருபோது மண்டலந்தான் கொள்ளு
நலமான மூலமெலா மோடிப் போமே. (கூக)

## வல்லாரைக் கிருதம்.

போமப்பா சூரணத்தின் மகத்துவஞ் சொன்னேன்
பொருளான கிருதநெய் நடவைக் கேளு
வாமப்பா வல்லாரைக் கிருதஞ் சொல்வேன்
வளமான வல்லாரைச் சாறுபடி தானொன்று
நாமப்பா வாவாரைச் சாறு படி தானொன்று
நலமான கொன்றைச்சாறு படி தானொன்று
காமப்பா தக்காளிச் சாறுபடி யொன்று
கனமான கொன்றைச்சாறு படிதானொன்றே, ()

ஒன்றான வாவின்பால் படிதானொன்று
உத்தமனே கற்கவகை சொல்லக் கேளு
நன்றான திரிபாலை சாதிக் காயும்
நலமான கல்வத்தி லாவின்பா லாட்டி
வண்டான நெய்தனிலே கலந்துகொண்டு
வளமான வடுப்பேற்றித் தீயை மூட்டி
கண்டான நீர்சுண்டக் கிருத மாகும்
கனமான சர்க்கரைதான் பல மிரண்டுபோடே

போட்டப்பா வடிப்பற்றாமல் கிண்டு கிண்டு
போரான கிருதத்தைப் பதனம் பண்ணு
வாட்டப்பா பூசித்து மனிதருக்கு
வளமான கரண்டிநிறை யிருபோ துண்ண
ஆட்டப்பா மேகமொடு கிரந்தி யூறல்
அப்பனே சொறிசிரங்கு வெள்ளை ரெத்தம்
நாட்டப்பா சதையடைப்பு நீர்க்கட்டெல்லா
நல்மாக வோடிவிடும் நவிலொண் ணாதே. (௩௪)

## முயல்ரத்த நெய்.

ஒண்ணாத நெய்யொன்று சொல்லக் கேளு [வேன்
உத்தமனே முயல்ரெத்தம் நெய்யைச் சொல்
வண்ணாத முயல்ரெத்தம் படியளைதான் வாங்கி
வளமான வெள்ளாட்டு நெய்யை வாங்கு
கண்ணாத தூதளைச்சாறு படிதா னென்று
கடுத்தான யிஞ்சிச்சாறு படிதா னென்று
அண்ணாத ஈச்சஞ்சாறு படிதா னென்று
அப்பனே சங்குச்சாறு படியொன்று வாங்கே.

வாங்கப்பா கற்கவகை சொல்லக் கேளு
வளமான ஏலமொடு தேக்கு வங்கம்
ஆங்கவே கற்கடக சிங்கி யோடு
அப்பனே வாலுளுவை கண்டங் கத்திரி
நாங்கவே யிதுவகைக்குப் பலந்தா னென்று
நலமாக வரைத்ததிலே கலக்கி விட்டே
சாங்கவே யடுப்பேற்றி நீர்சுண்டக் காய்ச்சி
சமர்த்தான நெய்யதனை வடித்துக் கொள்ளே.()

கொள்ளப்பூ சித்துமிரு போது முண்ணக்
குணமான க்ஷயமெட்டும் பறந்து போகும்
விள்ளவே சுவாசமொடு காச மாந்தை
விதமான விருமலோ டிளைப்பு விம்மல்
கொள்ளவே கொறுகொறுப்பு மேற்சுவாசம்
குணமான சுரமுடனே பிணிகளெல்லாம்
மெள்ளவே யோடிவிடு மருந்து வந்தான்
இதமான முயல் நெய்யின் பெருமைதானே. ()

## பிரம லேகியம்.

தானான வின்னமொரு பிரமமென்ற
 தனதான லேகியந்தான் சொல்லக் கேளு
மானான நன்னாரி நத்தைச்சூரி
 வளமான சங்கங்குப்பி கூட்டு கூட்டு
கானான செம்முள்ளி யானை நெருஞ்சில்
 க்னமான மேனியொடு முக்கத் தாரி
ஆனான கூவிளம்வேர் குன்றிவேரும்
 அப்பனே செவ்வவரி நெருஞ்சில் செப்பே. ()

செப்பாத கையானும் பொற்றலையுங் கூட்டு
 செயலான மருதம்வேர் சின்னி வேரும்
வப்பாத வாகாயக் கருடன் கூட்டு
 வளமான விஷ்ணுமூலி கீழா நெல்லி
கப்பாத கரந்தையொடு பொன்னாங் காணி
 கனமான இலந்தைவேர் முசுமு சுக்கை
யப்பாத கொவ்வையுட கிழங்கு புங்கு
 அப்பனே விளாம்பிசினும் விளாமிச் சாமே.

ஆச்சென்ற வத்திப்பிஞ் சிலவம் பிஞ்சு
 ஆனதொரு கொன்றைப்பிஞ்சு தென்னம்பிஞ்சு
வாச்சென்ற பூவரசம் பிஞ்சு கூட்டு
 வளமான நிலப்பனைக் கிழங்கு கூட்டு
நாச்சென்ற கொடிவேலி குமரி கூட்டு
 நலமான கூந்தலொடு வேலிப் பாசி
காச்சென்ற விதுவெல்லாம் ரவி யுலர்த்திக்
 கன்மான வகைக்குப்பலம் மூன்று வாங்கே. ()

வாங்கியே யிடித்ததனை வடித்துக் கொண்டு
வளமான கடுக்காயுங் கடுக்காய்ப் பிஞ்சு
தாங்கியே சாதிக்கா யேலங் கிராம்பு
தலமான பத்திரியுஞ் செண்பகப்பூ
யாங்கியே திரிகடுகு குங்கு மப்பூ
அப்பனே பலமொன்று தூளாய்ப் பண்ணி
தாங்கியே பனைவெல்லம் பாகு செய்து
தளராத சூரணத்தைக் கொட்டிக் கிண்டே. ()

கிண்டவே மெழுகதுபோற் பாகம் பாரு
கெடியான லேகியத்தை யிறக்கிக் கொண்டு
வண்டவே பூசித்துப் பரணில் வைத்து
வளமான இருபோது பாக்களவு கொள்ளு
நண்டவே பாண்டுடனே காச சூலை
நலமான வெட்டையொடு இருமல் ரெத்தம்
கண்டவே கன்னவிப் புருதி சூலை
கனகண்ட மாலைவெண் குட்டம் போமே, (௧0௨)

போமப்பா கிராணியொடு மூல குஷ்டம்
பேரான கிரந்தியரை யாப்பு புண்ணு
வாமப்பா வயிற்றுவலி வாத ரோகம்
வழிகாணு தோடுமடா வகுத்திட் டேனே
நாமப்பா நவபிரம லேகியந்தான் சொல்வேன்
நலமான சிவன்வேம்பு சங்கு மூலம்
யாமப்பா கொடிவேலி வெள்ளறுகு முத்தம்
அன்பான வெருமுட்டை சங்கு குப்பே, (௧0௩)

## நவபிரம லேகியம்.

குப்பியென்ற கூவிளம்வேர் சின்னி வேரும்
குருவான குன்றிவேர் நத்தைச் சூரி
வப்பியென்ற கருவேலங் காய்பொற்கை யானு
மப்பனே வாதகரப்பான் பறங்கிச் சக்கை
நப்பியென்ற நாயுருவி நன்னாரி கொத்தான்
நிலமான கண்டங்கத்திரி சங்கு மூலம்
தப்பியென்ற தழுதாழை கொன்றை முன்னி
தரிதான காரையொடு விலாமிச்சை வேரே. ()

வேரான வழுக்குரா யிலவன் வேரும்
வேதாந்தக் கிரிமூலி சிவன்மூலி வேரும்
ஆரான பூவரசம் வேரும் பட்டை
அப்பனே கொள்ளுக்காய் வேளை மூலம்
நாரான தூதளை புங்கம் வேரும்
நலமான பொற்கையான் வேரும் கூட்டே
காரான பத்திரியுங் குருந்த வல்லி
கனமான அல்லிநாவ லாலம் விழுதே. (௧௦௫)

விழுதான விலுப்பையொரு வெள்ளரி வேரும்
வேதாந்த நாரத்தையொடு நற்றுளசி மூலம்
தழுதான பிசினிவகை சொல்லக் கேளு
தரிதான புங்கினொடு அத்தி மாவும்
மழுதான கருவேலி மாசிக்காய் கூட்டு
மகத்தான வேம்புடனே கொன்றைபிசினிகூட்டு
வழுதான மூலிவகை யுலர்த்திக் கொண்டு
அப்பனே பலமூன்று இடித்துத் தானே. (௧௦௬)

தானான பிசினிவகை யுலர்த்திக் கொண்டு
தப்பாமற் பலமரைதா னிடித்துக் கூட்டு
வானான பிசினியுடன் பாவுசெய்து
வளமான சூரணத்தைக் கொட்டிக் கிண்டு
நானான கடைக்சரக்குச் சொல்லக் கேளு
நலமான திரிகடுகு திரிப லாதி
மானான சாதிக்காய் ஏலங் கிராம்பு
மகத்தானவாலுளுவை லவங்கப்பட்டைதானே.

தானென்ற பலமரைதா னிடித்துத் தூவு
தப்பாமற் கிண்டிவர மெழுகாம் பாரு
வானென்ற இறக்கியதைப் பரணில் வைத்து
வளமான விருபோது பாக்களவு கொள்ள
நானென்ற பத்தியந்தான் புகைபுளியைத் தள்ளு
நலமான வெண்ணெயொடு பெண்ணுந் தள்ளு
யானென்ற கர்மந்தான் மேக ரோகம்
அப்பனே யஸ்திவெட்டை மேலெரிவுகால் காந்
தல்போமே. (௧0அ)

போமப்பா வயிற்றுவலி குன்மமெட்டும் போகும்
அப்பனே யஸ்திரெணம் சூலைபதி னெட்டும்
போமப்பா வாதத்தால் வந்த நோய்கள்
பொல்லாத விந்தகுன்மம் பீனிசங்கள்
காமப்பா கண்டமாலை பவுத்தி ரங்கள்
கண்காணு தோடமடா கர்மநோய்கள்
நாமப்பா வித்தனையு மிதனாற் றீரு
நலமான வடமொழிதா னின்னூல் பாரே.

## நூற்றெருகுப்பு.

பாரப்பா வைத்தியரே யுங்களுக்காய்ப்
பரிவாக யானறிந்து பாடினேன் பாரு
காரப்பா வென்னூல்தா னெழுபத் தொன்றில்
காட்டினேன் யானறிந்து சுருக்சாயப்யா
வாரப்பா வறுபத்து நான்குசித்து
வ்ளமாக வாடுதற்குக் கலைக்கியானஞ் சொன்னே
ஆரப்பா வறிவார்க ணிகண்டின் போக்கு [ன்
ஆதவன்போற் திருமூலர் காணுந் தானே. ()

பாரப்பா வாயிரத்தி னூற்றிலேதான்
பண்பான கருக்கிடைதான் வைத்தியந்தான்
யாரப்பா வறிவார்கள் இந்நூலைத்தான் [தோன்று
அப்பனே முழுதுமுற்றுங் கண்ட போக்கு
மாரப்பா வைத்தியனே டெதிர்க்க மாட்டார்
மகத்தான பிரசண்ட வயித்தி யனுவான்
காரப்பா கருவாளி யென்னூல் பார்ப்பான்
கருத்தறியார் கழுதைகளே பாரார்தானே. ()

தானப்பா கருத்தறிய வேணு மென்றால்
தனதான முப்பூவின் கருவைப் பாரு
வானப்பா சாகாம லிருக்க வென்றால்
வளமான வாசியுட வளப்பங் காணும்
காணப்பா வமுர்தமதைக் கொள்ள வென்றால்
கண்மணியை கண்மேனோட்டங் கனலைப் பாரு
மானப்பா மதியமுர்தந் தன்னைக் கொள்ளு
மகத்தான சஞ்சீவி திகைப்பூட்டைக் காணே. ()

## அண்டத்தின் பெயர்.

காணப்பா பூட்டென்ற திறவு கோல்தான்
கனமான வாயிரத்தெட் டண்டமாச்சு
வாணப்பா வழலையுட மகிமை கண்டால்
வளமான மறைப்பெல்லாங் கண்ணிற் காணும்
மாணப்பா மகத்தான சித்தன் காண்பான்
மற்றோர்கள் மடையர்கள் காணார் பாரு
ஆணப்பா ஆதியந்த கோசபீசம்
அப்பனே அடிமுடியும் அண்டபிண்ட மாச்சே.
ஆச்சப்பா கந்தரு வாண்ட மாச்சு
ஆகாச வெளியாச்சு யமந்த தாச்சு
மாச்சப்பா மதியமூர்தம் விந்து மாச்சு
மகத்தான கண்ணிஜொளி யதனு லாச்சு
காச்சப்பா வல்லாரை கற்பமாச்சு
கண்மணியே யுந்தியெனுங் கமல மாச்சு
நாச்சப்பா நந்தியென்ற வண்ட மாச்சு
நாதாந்தச் சித்தருட மூலங் காணே. (கக௪)

## பிண்டத்தின் பெயர்.

காணப்பா சிவதீட்சை சத்தி தீட்சை
கனமான தீட்சையெலா முப்பூ வாச்சு.
யாணப்பா வழலையென்ற வண்ட முப்பூ
அப்பனே யிதினாலே யெல்லா மாச்சு
வாணப்பா விவ்விதங்க ளான மூலம்
வளமான வுலக பிரம விஷ்ணு ருத்திரன்
மாணபா மண்டையெனு மண்டந் தன்னை
மகத்தான சிவனெடுத் தமுதுண் ணார். (ககரு)

உண்ணப்பா இதுவிட்டால் எல்லாம் போச்சு
உத்தமனே காயாதி கற்ப மில்லை
வண்ணப்பா காயென்று கபாலந் தாண்ட
வளமான சற்குருதான் கபால முற்று
மண்ணப்பா வப்பாச்சு உப்புமாச்சு
மகத்தான வண்டமென்ற பிண்ட மாச்சு
கண்ணப்பா கல்விபெற வுப்பு மாச்சு
கண்மணியே யோகமுடன் ஞான மாச்சே. ()

## மும்மூர்த்தி தைலம்.

ஆச்சப்பா மாதினிஷ்டை மார்க்கஞ் சொன்னேன்
அப்பனே தைலத்தின் மார்க்கங் கேளு
மூச்சப்பா மும்மூர்த்தி தைலஞ் சொல்வேன்
உத்தமனே புங்கம்வேர்ச்சாறு படிதா னென்று
காச்சப்பா பாதிரியின் வேர்ப்பட்டைச் சாறுங்
கனமான கோவையுட கிழங்குச் சாறு
நாச்சப்பா வாழைக்கட்டை பெருக்கஞ் சாறு
நலமான வில்வவேர் வகைபடிதான் சாறே. ()

சாறப்பா நெல்லிச்சாறு வல்லாரைச் சாறு
சதா சிவந்தன் தண்டினது மூலிச் சாறு
யாரப்பா கர்ப்பூரவள்ளிச் சாறு
அப்பனே சங்குச்சாறு செருப்படைச் சாறு
காரப்பா நற்றுளசி மாசிப் பத்திரி
நலமான சாறுடனே கையான் சாறும்
வாரப்பா தும்பைச்சாறு குமரிச் சாறும்
வளமான மாசிப்பத்திரிச் சாறுங் கூட்டே. ()

கூட்டப்பா விதுவெல்லாம் படிதா னென்று
குறிப்பறிய ச்சிற்றண்ட வெண்ணெய் ரெண்டு

வாட்டப்பா கற்கமூலி விபரஞ் சொல்வேன்
வளமான கீழாநெல்லி சூரிய காந்தி
ஆட்டப்பா சந்தனத்தூள் கர்க்கட சிங்கி
அப்பனே வால்மிளகு சீரகந்தான் ரெண்டு
நாட்டப்பா சாதிக்காய் ஏலங்கிராம்பு
நலமான லவங்கப்பட்டை மாசிக் காயே. (௧௧௯)

காயோடு இதுவெல்லாம் பலந்தா னென்று
கனமான வாவின்பால் தன்னு லாட்டி
வாயோடு எண்ணெயிலே கலக்கிக் கொண்டு
வளமாக வடுப்பேற்றித் தீயை மூட்டி
நாயோடு நீர்சுண்டி மெழுகுபதத்தைப் பாரு
நலமான தைலத்தை யிறக்கிக் கொண்டு
தாயோடு நெற்பானை தன்னில் வைத்து
தயவாக ஏழுநாட்சென்று பாரே

பாரப்பா தைலத்தை முழுகி னக்கால்
பாழான கிழவனவன் குமர னவான்
யாரப்பா நரைதிரையு மறைந்து போகும்
அப்பனே சூலையொடு ரணங்கள் கட்டி
நாரப்பா மேககர்ம வியாதி யெல்லாம்
நலமாகப் பொடிப்பொடியாய்ப் பறந்துபோகும்
காரப்பா கணப்பாண்டு கர்ம மூலம்
கைகடந்த மூலச்சூ டெல்லாம் போமே. (௧௨௧)

### கண்டா விழதம்.

போமப்பா கண்டாவிழதஞ் சொல்லக் கேளு
பொருளான கலைக்கொம்பு யானைக் கொம்பு
நாமப்பா காண்டாமிரு கத்தின் கொம்பு
நலமான வதிமதுர மக்கிரா காரம்

காமப்பா கோஷ்டமுடன் ஏலங் கிராம்பு
கனமான தும்பராட்சகமுஞ் சேரு
வாமப்பா இவை யெல்லாஞ் சமன தாக
வானதொரு திப்பிலியு மாதளம் விரையே. ()

விரையான பெரியுடனே சீனி கூட்டி
விதமான தேனதிலே குழைத்துக் கொண்டு
அரையான நாவினிலே தேய்த்திட் டாக்கால்
அப்பனே குளுமையுடன் தோட சன்னி
கரையான தோஷமெலாங் கரைகெட் டோடும்
கனமான நோயெல்லாங் கழன்று போகும்
நரையான நாவறட்சி சுரங்கள் போகும்
நலமான தாகமுட னழலும் போமே. (௧௨௩)

போமப்பா என்னைப்போ லார்தான் சொல்வார்
புகழான என்னந்தி யருளி னாலே
காமப்பா கணக்காய்க் கை பாகஞ் சொன்னேன்
கண்மணியே யறிவுள்ளோர் தேர்வாரையா
வாமப்பா பன்னீ ராயிரம் போலே
வளமாக யார்சொன்னார் வகுத்துப்பாரு
நாமப்பா என்னந்தி யருளி னாலே
நலமாகச் சொல்லிவிட்டே னின்னங் கேளே. ()

கேளப்பா கிருதமொடு நெய்யுஞ் சொன்னேன்
கெட்டியா ஞானமொடு காந்தஞ் சொன்னேன்
வாளப்பா வழிதுறைகள் காணச் சொன்னேன்
வளமான வறிவுடனே விவேகஞ் சொன்னேன்
காளப்பா வெண்ணெயொடு தைலஞ் சொன்னேன் [ர்
கண்மணியே யென்னைப்போ லார்தான் சொல்வா

ஆளப்பா சகலருக்குந் தோணச் சொன்னேன்
அப்பனே மாத்திரைகள் கலிக்கஞ் சொன்னே
சொன்னப்பா லேகியங்கள் எண்ணெய்சொன்னேன்
சொல்பெரிய புடத்தைலஞ் சக்கரங்கள் சொன் [னேன்
வன்னனப்பா யோகமுடன் வாசி சொன்னேன்
வளமான தேவதைகள் வசியஞ் சொன்னேன்
கன்னனப்பா ஊமையெழுத் ததனைச் சொன்னேன்
கனமான வழலைமுப்பூவுஞ் சொன்னேன்
பன்னனப்பா யோகநிஷ்டை யமுர்தஞ் சொன்னேன்
பன்பான இனிமேலே சொல்லக் கேளே. ()

தோஷக் கிஷாயம்.

கேளப்பா கிஷாயத்தின் பெருமை கேளு
கெடியான முத்தமோ டக்கிரா காரம்
வாளப்பா வதிமதுரங் கோஷ்ட மூலம்
வளமான லவுங்கமொடு சித்திர மூலம்
நாளப்பா திரிகடுகு திரிபலாதி
நலமான வெட்பாலை சீரகந்தான் ரெண்டு
ஆளப்பா மிளகுதனைப் பற்பம் பண்ணி
யப்பனே சீரகத்தைப் பொரிய வையே. ()

வையப்பா மற்றதெல்லாம் பொடித்துக் கொண்டு
வளமான சலந்தன்னைப் படியளந்து வாரு
வையப்பா வெட்டொன்ருய்க் காய்ச்சிக் கொண்டு
அப்பனே மனிதருக்கு முப்பொழுது வாரு
வையப்பா கைவிட்ட தோஷ மெல்லாம்
வகைகடந்த தோஷமுடன் சுரங்கள் போகும்
வையப்பா வெலும்பு ரெத்தமாங்கிஷத்தில் வந்த
வன்பான வறுபத்து நான்கும் போமே. (கஉஅ)

## சன்னிக் கிஷாயம்.

போமப்பா வின்னமொரு கிழாயஞ் சொல்வேன்
புகழான கிழாயமடா வாருஞ் சொல்லார்
வாழப்பா வானுளுவை சிவனர் வேம்பு
வளமான கண்டங்கத் திரிய ரத்தை
நாமப்பா நஞ்சுமறி கழுதைப பாலை
நலமான திரிகடுகு வசம்பு வெள்ளுள்ளி
கமப்பா கொடிவேலி கஞ்சாங் கோரை
கனமான போஸ்தக்காய் மாசக்காயே. (கஉகூ)

காபப்பா சாதிக்காய் சிஷ்டி யேலம்
கனமான லவங்கமொடு பறங்கிச் சக்கை
வாயப்பா வால்மிளகு சங்கம் பட்வீட
வனமான நாயுருவி புளியம் பட்டை
நாளப்பா தூதளை முக்கத் தாரி
நலமான பேய்ப்புடோல் கூவிளம் வித்து
பேயப்பா நாமமுடன் கருஞ்சீரகங் கூட்டு
புகழான மாவிலிங்கம் வேருங் கூட்டே. (கநு0)

சேரப்பா வால்மிளகு மிளகு ரெண்டும்
செம்மையுடன் பற்பமதாச் செய்து கொண்டு
வாரப்பா மருந்தெல்லா மிடித்துக் கொண்டு
வளமாகக் கூடச்சேர்த்து தண்ணீர்படி ரெண்டு
பாரப்பா வெட்டொன்ருய்க் காய்ச்சிக் கொண்டு
பதிவாக சன்னிகண்ட மனிதர்க்கீந்தால்
நாரப்பா சன்னிவிஷ தோஷங்கள்
நாடாது கிழாயங்கண்ட போது தானே. ()

## பித்தநோய்க் கிஷாயம்.

தானப்பா மாத்திரைக ளனுப்பான மாகத்
த னீய நோயெல்லாந் தவறுண் டேபோம்

வானப்பா வின்னமொரு கிழாயஞ் சொல்வேன்
வளமான கிழாயந்தான் மெத்த நன்று
யானப்பா ஓதியம்பட்டை யத்திப் பட்டை
அப்பனே சிற்றுமுட்டி பேரா முட்டி
கானப்பா வில்வவேர் நெல்லி யீர்க்கு
நலமான நரிப்பயற்றனி லவன் வேரே. (கஙஉ)

வேரப்பா நெருஞ்சில்வேர் நேர்பொரியுங் கூட்டு
வேதாந்த ஓரிலைத்தாமரை கீழ்காய் நெல்லி
காரப்பா ஆவாரம் வேருங் கூட்டு
நலமான தாணியுடன் சீரகந்தான் கூட்டே
வாரப்பா சீரகத்தைச் சட்டிதனிலே போட்டு
வகுத்துமே மருந்தெல்லா மிடித்துப் போட்டு
காரப்பா தண்ணீர்படி முக்கால் விட்டுக்
கனமான தீயெரித் தெட்டொன் றுக்கே. ()

ஆக்கப்பா சிங்கிபற்பம் போட்டுக் கொள்ளு
ஆனதொரு மேலெரிவு கைகால் காந்தல்
வாக்கப்பா வயிறெரிவு நெஞ்செரிவு போகும்
வளமான கண்ணெரிச்சல் மண்டைக் காந்தல்
சாக்கப்பா சஞ்சாரப் பித்த நோய்கள்
சமர்த்தான நோயெல்லா மாண்டு போகும்
நாக்கப்பா நந்தீச ருடன் னுலே
நலமாகப் போகுமடா நவின்றிட் டேனே. ()

## ஆக்கிராணத்தூள்.

ஏனப்பா வாக்கிராண மகிமை சொல்வேன்
என்மகனே யென்னைப்போ லியார்தான் சொல
வாணப்பா தும்பைவேர் வெண்மிளகு கூட்டு [வார்
வளமான முருங்கைவேர் பழம்புண் ணாக்கு

யானப்பா இதுவெல்லா முலர்த்திக் கொண்டு
அப்பனே பலமொன்று தூக்கி வாங்கு
நாமப்பா தூள்பண்ணி கட்டிக் கொண்டு
நலமாக பரணி தனில் பதனம் பண்ணே. (கரு)

பண்ணப்பா பூசித்து சன்னி நோக்குப்
பணவெடைதா னெடுத்துநா சியினில் போடு
எண்ணப்பா பிசகாது சொன்னேன் சொன்னேன்
இணக்கமுட னிம்முறையைச் செய்து பாரு
வண்ணப்பா சன்னியொடு நாவறட்சி போகும்
வனமான பீடைநோ யெல்லாம் போகும்
மண்ணப்பா வாக்கிராண மறைப்பே யில்லை
மகத்தான வைத்தியரே மகிழ்ந்து பாரே

## முப்பூ பெருமை.

பாரப்பா விதுக்கெல்லா முப்பூ வேணும்
பண்பான முப்புதொட்டால் வயித்திய னவான்
காரப்பா முப்புவிட்டால் விடாது கர்மம்
களமான சிவஷிஷ்டை முப்பூ வையா
யாரப்பா முப்பூவும் க்ஷணத்தி லாகும்
அப்பனே முப்பூவை வேண்டிக் கொள்ளு
நாரப்பா வைத்தியர்க்கு இந்நூல் போதும்
நாதாந்தம் போகுமடா நவிலக் கேளே. ()

கேளப்பா தேறுவோர்க் கெந்நூல்தான் வேணும்
கேள்மகனே ஞானியர்க் கெந்நூல்தான் வேணும்
வாளப்பா வென்னூலைப் பார்க்கா மூடர்
வளமான செய்முறைகள் பலியா தையா
ஆளப்பாகைபாகந் திறமாய்ச் சொல்வேன்
அப்பனே செய்பாக மறிந்து சொன்னேன்
நாளப்பா கருக்களுடன் செய்பா கந்தான்
நலமான வைத்தியரே நன்மை பாரே. (கஅ)

## ஞான புத்தி.

பாரப்பா வேணமுறை யிதிலே சொன்னேன்
பண்பான கருக்களெல்லா மிதிலேசொன்னேன்
ஆரப்பா வறிவார்கள் கருக்கிடையின் சூட்சம்
அப்பனே முழுதுமுற்றுங் கண்டபேர்க்கு
யாரப்பா வொருநாளுங் குறைவ ராது
அப்பனே சடாட்சரம்போ லிந்நூ லையா
தாரப்பா வாயிரத்து இருநூற்றுக்கு
நலமான விந்நூல்தான் திறவு கோலே. (கஙகூ)

கோலான முதல்மொழிதான் காவியஞ் சொன்னேன்
குருவானபிற்பாடு கலைக்கியானஞ் சொன்னேன்
வாலான பன்னீரா யிரந்தான் சொன்னேன் [ன்
வளமான நூல்களெல்லாந் தேர்ந்து சொன்னே
காலான காற்றலையாய் மறைத்த தெல்லாம்
கனமான நிகண்டுமுந் நூற்றிற் சொன்னேன்
யாலான முந்நூற்றை யார்கொடுக்கப் போறார்
அப்பனே நிகண்டைத்தான் தேடிக் கொள்ளே.

கொள்ளப்பா நான்சொன்ன முப்பூ வைத்தான்
கெதிகெட்ட நாதாக்கள் கொடுக்கா ரப்பா
வாளப்பா நவகோடி சித்த ரெல்லாம்
வாங்கிமிகத் தெளிந்தார்கள் வண்மை யாக
காளப்பா கனகசபை நடனங் கேட்டு
கயிலாச வாக்கமெனக் களித்தார் சித்தர்
நாளப்பா செயநீரின் பெருமை கேட்டால்
நாதாந்த வன்பதிலே நன்மை பாரே. (கசக)

பாரப்பா வெகுகோடி சித்தர்க் கெல்லாம்
பண்பான செயநீரி லெடுத்து வாரு

வீரப்பா வடமொழியில் நவகோடி போக்கு
வளமான ஜெயநீரா மின்னூலையா
காரப்பர் வெனைப்போன்ற பொதிகைச் சித்தர்
கனமான பதினெண்பேர் குருநூலென்னூல்
ஆரப்பா வறிவார்கள் பதினெண் பேரும்
அப்பனே வடதேச மிருந்தோ ராச்சே. (கசஉ)

ஆச்சப்பா வீசனுட சபதத் தாலே [தார்க்
அப்பனே யென்னைப்போற் பொதிகை சேர்ந்
காச்சப்பா சித்தர்களுங் கூட்ட மானூர்
கருவான பொதிகையிலே கருத்தை வைத்தார்
நாச்சப்பா தென்பொதிகைச் சித்தர்க் கெல்லா
நாதாந்த வென்னூல்தான் தாய்நூலப்பா
மாச்சப்பா வடமொழியொன் றரும புத்திரன்
மகத்தான வென்னுடைய வாக்கியந் தானே. ()

தானான மடையருக்கே யின்னங் கேளு
தாக்கான வென்னூற்றுன் செப்பே டப்பா
வானான செப்போலே தன்னி லேபா
வளமான தேறுவதோர்க் கெழுதி விட்டேன்
கானான கருவாளி தேறுவா னென்று
கனமான நான்முகனுந் தேறச் சொன்னேன்
நானான தருமவான் தேர்வா னையா
நலமான கருமிகளோ தேரார் பாரே. (கசச)

வல்லாரைக் கற்பம்.

பாரப்பா கற்பத்தின் மகிமை கேளு
பண்பான வல்லாரை கொடிமூலம் வாங்கிச்
சேரப்பா சுத்திசெய்து உலர்த்திக் கொண்டு
செவ்வையான கல்லுரலில் தூளாய்ப் பண்ணி

வாரப்பா கரண்டி நிறை சூரணத்தை
வளமான ஊசிநீர் தன்னிற் கொள்ளு
பேரப்பா யோகநிஷ்டை கற்பஞ் சொன்னேன்
புகழான ஞானத்தின் கற்பங் கேளே. (கசரு)

யோகச் சூரணம்.

கேளப்பா நிஷ்டையுட கற்பஞ் சொன்னேன்
கெடியான யோகத்தின் கற்பங் கேளு
வாளப்பா வடிமூலந் தன்னை வாங்கி
அப்பனே சுத்திபண்ணி யுலர்த்திக் கொண்டு
காளப்பா கல்லுரலில் தூளாய்த் தாக்கி
கரண்டி நிறை யுட்கொள்ளு ஞானப் போக்கு
மாளப்பா ஞானமது வன்பருக்கு
மகத்தாகச் சித்திக்கும் வகுத்துப் பாரே (கசசு).

வங்கபற்பம்.

பாரப்பா வங்கபற்பஞ் சொல்லக் கேளு
பரமான நாதாக்கள் மறைத்தா ரையா
யாரப்பா வங்கமது பலந்தா னெட்டு
அப்பனே சுத்தசலந்தன்னைச் சேர்த்து
வாரப்பா வஞ்சுதர முருக்கிச்சாய்க்க
வளமான வங்கமது வெள்ளி வட்டாம்
நாரப்பா முன்சொன்ன சிவன்வேம்புத் தைலம்
நலமான வதில்முப்பூ போட்டுக் கொள்ளே. ()

கொள்ளப்பா வாட்டிவட்டாய் மெழுகுபோல
குறையாமல் மெழுகுதனைக் கவசம் போடு

வள்ளப்பா விந்ததனுற் கவசம் போடு
வளமாக மண்சீலை யேழும் போடு
நள்ளப்பா ரவியுலர்த்திக் காயப் போடு
நலமான முப்பத்திரண் டெருவிற் போடு
அள்ளப்பா வரனுதித்தாற் போலே வெள்ளை
அப்பனே போட்டெடுத்து மண்கவசம் வாங்கே.

வாங்கப்பா மெழுகதுவுங் கருகி நிற்கும்
வளமான வங்கமது வெண்ணீர் போலாம்
வாங்கப்பா வெண்ணிறத்தை யென்ன சொல்வேன்
அப்பனே வங்கபற்பந் தேனிற் கொள்ளு
வாங்கப்பா க்ஷயகாச மீழை ரெத்தம்
வகையாக க்ஷயமெட்டுஞ் சாந்தமாமே [டால்
வாங்கப்பா வெண்ணெயிற் பணவெடைதான் கொண்
வந்தமே கங்களிருபத் தொன்றும் போமே. ()

## தாம்பிர பற்பம்.

போமப்பா வனுபான மறிந்துக் கொண்டால்
புகழான சூலைபதி னெட்டும் போகும்
வாமப்பா பீனிசங்கள் கபாலச் சூடெல்லாம்
அப்பனே யகன்றுவிடும் நோய்கள் பாரு
தாமப்பா தாம்பிரத்தின் வெள்ளை கேளு
தனமான தாம்பிரந்தான் பலந்தா னஞ்சு
நாமப்பா காச்சியதை யுமி நீரிற்றுன்
நலமான பன்னிரெண்டு தரந்தான் தோயே. ()

தோயப்பா செம்பதுவும் களிம்பு போச்சு
தூய்யநிற மானதொரு வயச்செம் பைத்தான்
வோமப்பா முப்புச்சுண்ணங் காரங் கொண்டு
உத்தமனே கல்வத்திற் பலம்ரெண் டிட்டு

கோயப்பா வண்டநீர் தன்னை லாட்டி
நுணுக்கமாய் மெழுகதுபோ லாகும் பாரு
மோயப்பா வழித்தெடுத்துச் செம்பின்மேற் பூசு
மிதமாக ரவிதனிலே சாமம் வையே. (கருக)

வையப்பா கிடுகிடென்று நடுங்கிச் சால
வளமான செம்பதிலே யேழு சீலை
கையப்பா பிலாமரத்தைத் தோண்டிக் கொண்டு
கனமான செம்பைவைத் தாப் படித்து
நையப்பா வதின்மேலே மண்ணுஞ் செய்து
நலமான புடம்போட் டெடுத்துப் பாரு
மையப்பா வெள்ளைநிற மென்னச் சொல்வேன்
மேலான தாம்பிரவெள்ளை பதனம் பண்ணே. ()

பண்ணப்பா பாவகர்மம் பாவி கட்கும்
பண்பான வபானனுடன் வியானன் கூடி
வண்ணப்பா யானைக்கால் வியாதி பாரு
அப்பனே யவரவர்செய் தபாவ ரோகம்
கண்ணப்பா நாற்பதுநாள் பற்பங் கொள்ளு
கனமான வனுபான மாகக் கொள்ளு
விண்ணப்பா மண்ணைவிட் டோடிப் போகும்
வேதாந்த பற்பத்தின் மருத்துவங் காணே. ()

## கர்ம வியாதி.

காணப்பா வுதானனுடன் சமானன் கூடி
கனமான கருமிகட்கு வாத ரோகம்
வீணப்பா மகாகோடி பாவஞ் செய்தால்
வினையான விஷரைவாதம் வந்து சேரும்
வாணப்பா வனுபானஞ் சூரணத்திற் கொள்ளு
அப்பனே வாய்வெல்லாம் நிலைவிட் டோடும்

மாணப்பா சடத்திலுள்ள வெண்பத்து நாலும்
மதிகெட்டே யோடிவிடும் மருத்துவம் பாரே.

பித்தளைப் பற்பம்.

பாரப்பா பற்பத்தைச் செய்தோர்க் கெல்லாம்
பண்பான நல்வினைகள் வந்து சேரும்
வாரப்பா வறிவார்கள் கர்மந் தீர்ந்தால்
அப்பனே தர்மமது இவர்க்கே யெய்தும்
வீரப்பா பித்தளையின் வெள்ளை கேளு
விதமான பித்தளையைக் காச்சு காச்சு
நாப்பா மூன்றுதரம் விந்திற் றோய்க்க
நலமான பித்தளையின் களிம்பு போச்சே. ()

போச்சப்பா வண்டமெழுகுக் குகைதான் பண்ணி
பொருளான பித்தளையைக் குகைக்குள்வைத்து
வாச்சப்பா முந்திரிவித்துத் தைலம் வாங்கி
அப்பனே குகைக்குள்ளே தைல மூற்றி
காச்சப்பா மேற்குகைதான் வலுவாய் மூடி
கனமான சந்துவாய் மண்சீலே செய்து
நாச்சப்பா புடம்போட் டெடுத்துப் பாரு
நலமான வெண்ணீறும் நவிலக் கேளோ. (கருசு)

கேளப்பா குகையை நன்று புடைத்துப் பாரு
கெடியான பற்பத்தைப் பதனம் பண்ணு
வாளப்பா பற்பத்தை வியாதிக் கீய
வளமான கன்மநோய் நாடா தப்பா
நாளப்பா நாட்செல்ல மாட்டா தையா
நலமான சடுதியிலே நோய்கள் தீரும்
மாளப்பா வைத்தியர்க்கே பற்பம் வேணும்
இல்லாட்டால் வைத்தியர்க்கோ தருமமில்லை. ()

அயபற்பம்.

இல்லையப்பா வயபற்பஞ் சொல்லக் கேளு
இதமான வயத்தைநன்றாய்த் தகடாய்த்தட்டி
வல்லையப்பா பனிநீரிற் காய்ச்சிக் காய்ச்சி
வளமான வேழுகரந் தோய்த்தா யானல்
மல்லையப்பா வருணனிறம்போ லயந்தா னாகும்
அப்பனே யயத்தகடு வெட்டை யாச்சு
கல்லையப்பா முப்பூவு முப்பூச் சுண்ணங்
கனமான வாய்நீரால் குழைத்துக் கொள்ளே. ()

கொள்ளப்பா தகட்டின்மேற் றளமாய்ப் பூசி
கெடியான மண்சீலை வலுவாய்ச் செய்து
வள்ளப்பா ரவியுலர்த்திப் புடத்தைப் போடு
அப்பனே நீறியது வெண்ணீ றாகும்
மள்ளப்பா வெண்ணீற்றை யெடுத்துக் கொண்டு
வளமான பணவெடைதான் வியாதிக் கீய
நள்ளப்பா வற்றிவிடும் பாண்டு வெல்லாம்
நலமான பற்பமடா நலம தாமே. (கருகூ)

வெண்கலப் பற்பம்.

ஆமப்பா வெங்கலத்தின் பற்பஞ் சொல்வேன்
அப்பனே புளியிலைச்சாறு பிழிந்து கொண்டு
வாமப்பா முப்பூச்சுண்ணங் களஞ்சி போட்டு
வளமான வெண்கலத்தைக் காய்ச்சித் தோய்க்க
நாமப்பா வெண்கலத்தின் களிம்பு போச்சு
நலமான வெண்கலத்தை யெடுத்துக் கொண்டு
காமப்பா புளியைநன்றாய்க் குகையாய்ப் பண்ணி
கனமான வெண்கலத்தை யதனில் வையே. ()

மையப்பா மேற்குகையை நன்றாய் மூடி
வளமான மண்சீலை யேழுஞ் செய்து
பையப்பா ரவியுலர்த்திப் புடத்தைப் போடு
பாகமாய் நீறியது வெண்மை யாகும்
கையப்பா குகைதட்டி யெடுத்துப் பாரு
கனமான பற்பமடா விடைபோ காது
நையப்பா நோய்களுக்குக் கொடுத்துப் பாரு
நசையாத நோய்களெல்லா மகன்று போமே. ()

திரு பற்பம்.

போமப்பா திருயினுட பற்பங் கேளு
பொருளான பற்பத்தை யாருஞ் சொல்லார்
வாமப்பா திருய்தன்னைக் காய்ச்சிக் கொண்டு
வளமான துராயிலையின் சாறு பிழிந்து
காமப்பா முப்பதுவி ராகன் போட்டு
கனமான வேழுதரந் திருயிற் றோய்க்க
யாமப்பா திருயதுவுங் கண்விட் டாடும்
பதமாக பற்பமது வாகுங் கேளே. (கசுஉ)

கேளப்பா வழலையுட மெழுகு தன்னைக்
கெடியான விந்ததிலே சீலை செய்து
வாளப்பா புடத்தைப்போட் டெடுத்துப் பாரு
அப்பனே நீறியது வெண்ணீ றாய்ப் போம்
மாளப்பா மேகநோய்க் கெல்லா மீய
மன்பாக நோயெல்லாம் பறந்து போகும்
நாளப்பா வுன்றனுக்குத் துன்பந் தானும்
நாடாது ஒருநாளும் நன்மை பாரே. (கசுங.)

பாரப்பா பரீக்ஷித்துச் சிகிச்சை செய்தாற்
பண்பான வைத்தியனென்ற பேருண்டாகும்

வாரப்பா வுடம்பதுவும் வளையா மூடர்
அப்பனே முப்பூவைச் செய்யா மற்றுன்
நாரப்பா நாடதிலே பொய்கள் சொல்லி [வார்
நளினமென்ற தழைச்சாற்றில் வைத்தியஞ் செய்
காரப்பா கன்மிகட்குக் கன்மம் வந்து
கடுகளவுஞ் சித்திக்கா கண்டு கொள்ளே. ()

## முப்பூவின் பெருமை.

கொள்ளவே வாதமப்பா முப்பூ வாலே
கொடிதான ஞானமப்பா முப்பூ வாலே
வள்ளலே தந்திரமோ டிந்திர சாலம்
அப்பனே முப்பூவா லாச்சு தையா
நள்ளவே யாகமுடன் வைத்தியப் போக்கு
நலமான முப்பூவா லான தப்பா
விள்ளவே நாண்விண்டேன் யார்தான் விண்டார்
வேதாந்த நாதாந்த மருத்துவங் கேளே. ()

## அகஸ்தியர் வாதகாவியப் பெருமை நூற்றெருகுப்பு.

கேளப்பா முதல்மொழி தான் தெக்ஷணத்தில்
கெடியான காவிய நூற் றன் னைச் சொன்னுன்
வாளப்பா சகலகலை யதனிற் சொன்னுன்
அப்பனே யம்மொழி போ லார்சொல் வார்கள்
தேளப்பா கொட்டுதல் போற் சீக்கிரத்தில் தேர்வார்
தேராம லிருந்தவர்க ளிதிலே தேர்வார்
நாளப்பா வாதமெனக் காவியம் பார்
நலமான நூலதுதா முற்றும் பாரே. (கசாசா)

பாரப்பா கற்பங்கள் நன்ருய்ச் சொன்ருன்
பண்பான்ற சத்தினுட கண்ணுடி சொன்ருன்
வாரப்பா வறிவார்கள் கற்பப் போக்கு
வப்பனே நிவர்த்தியுட மருந்து சொன்ருன்
காரப்பா விதற்குமுன்நி கண்டைப் பாரு
கனமான நிகண்டப்பா யார்தான் காண்பார்
நாரப்பா வென்னிகண்டைப் போலே யுண்டோ
நன்மகனே நிகண்டைத்தான் பதனம் பண்ணே.

பண்ணுவது என்னைப்போல் காவி யத்தைப்
பண்பான குகையில்வைத்துப் பூசை பண்ணு
நண்ணுவது என்னுடைய சாஸ்திர.மெல்லாம்
நலமான வடக்கமதாய்ப் பூசை பண்ணு
வெண்ணுவது வழிதுறையைச் சொல்லி விட்டோம்
விரைவான வறிவுள்ளோர் தேர்ந்து கொள்வார்
கண்ணுறது கைபாகம் செய்பாக மெல்லாம் [ளே
கருத்தாகச் சொல்லிவிட்டோங் கண்டு கொள்

## இரச செந்தூரம்.

கொள்ளப்பா செந்தூர மகிமை கேளு
கொடிதான ரசத்தினுட செந்தூ ரங்கேள்
விள்ளப்பா வாலரசம் பலந்தா னெட்டு
வேதாந்தக் கல்வத்தில் விட்டுக் கொண்டு
மெள்ளப்பா பஞ்சமலங் கொஞ்சம் போட்டு
மேலான விந்துநீர் சாம மாட்டு
வள்ளப்பா மெழுகதுபோ லாகும் பாரு
அப்பனே வழித்தெடுத்து வில்லை பண்ணே. ()

பண்ணப்பா குகையதுவும் புளியாற் பண்ணி
பண்பான வில்லையைத்தா னதனில் வைத்து

நண்ணப்பா மேற்குகைதான் கொண்டு மூடி
நலமான மண்சீலை யேழுஞ் செய்து
கண்ணப்பா கனிரவியில் வைத்திட் டாக்கால்
கண்மணியே வெங் கலம் போற் கரிந்து போகும்
வண்ணப்பா பத்தெருவிற் புடத்தைப் போடு
வளமான வருணனைப்போற் சிந்தூர மாமே. ()

ஆமப்பா செந்தூரம் பதனம் பண்ணு
அப்பனே பணவெடைதா னிருபோ துண்ணு
வாமப்பா பித்தசூலை வாத சூலை
வளமான கர்மசி லேஷ்ம சூலை
நாமப்பா நாட்செல்லாது சிலேஷ்ம சூலை
நலமான சூலையப்பா கன்ம வியாதி
காமப்பா கர்மநோய் யெல்லாந் தீரும்
கனமான சேந்தூரம் பட்டாற் போமே. (கஎக)

காந்த செந்தூரம்.

போமப்பா காந்தசெந் தூரங் கேளு
புகழான காந்தமது பலந்தான் ரெண்டு
நாமப்பா கந்தியது பலந்தா னொன்று
நலமான வீரமது பலந்தா னொன்று
வாமப்பா இதுமூன்றுங் கல்வத் திட்டு
வளமான முப்பூவுங் கழஞ்சி போடு
காமப்பா முருங்கப்பூச் சாற்றூற் சாமம்
கனமான கையான்சாறு சாமம் ரெண்டே. ()

ரெண்டான சாமமது மூன்று மாட்டி
ரேசகபூ ரகமுடனே வில்லை செய்து
வண்டான சீலையது மூன்று போட்டு
வளமான கெஜபுடத்திற் போட்டுத் தீரு

பண்டான சிந்தூர மென்ன சொல்வேன்
பண்பான நிறமென்றாற் சிவந்து காணும்
கண்டான் சிந்தூரம் பணவெடைதான் கொள்ள
கனமான கர்மத்தால் வந்த பாண்டே. (௧௭௩)

கேந்தி சேந்தூரம்.

பாண்டான பாண்டெல்லா மோடிப் போகும்
பண்பான பாண்டுவடா எல்லாம் போகும்
வாண்டான கந்தியட சிந்தூரங் கேள்
அப்பனே கெந்தியது பலந்தா னைந்து
காண்டான வீரமுடன் பூரம் லிங்கம்
கனமான விதுமூன்றும் பலந்தான் வீதம்
மாண்டான கல்வத்தி லிதுவெல்லாம் போட்டு
அப்பனே முப்பூவுங் கழஞ்சிபோடேன். (௧௭௪)

போட்டப்பா பொற்கையான் சாற்றா லாட்டி
புகழான வாலின்பால் சாம மாட்டு
வாட்டப்பா முருக்கம்பூச் சாற்றாற் சாமம்
வளமாக வாட்டிடுவாய் மெழுகுபோ லாகும்
காட்டப்பா கையாலே குகைதான் பண்ணி
கனமான குகையதனை யுலர வைத்து
நாட்டப்பா கந்தியது வில்லை தன்னை
நலமாக வுலரவைத்துக் குகைக்குள் வையே.

வையப்பா மேற்குகைதான் கொண்டு மூடி
வளமான சீலைமண் ணேழுஞ் செய்து
கையப்பா காடையுடங் தன்னிற் போடு
கனமான சிந்தூர மென்ன சொலவேன்
நையப்பா காந்தசெந் தூரம் போல
நாட்டிலே சித்தர்கள்தான் சொல்லவில்லை

மையப்பா சொல்லிவிட்டேன் விதியே மக்காள்
மேதினியில் மாந்தர்களே சொல்லக் கொள்ளே.

கட்டுவகை ஜெயநீர்.

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டா யானல்
குலைநோவுங் குட்டமுடன் சூலை போகும்
விள்ளப்பா நரைதிரைக ளெல்லாம் போகும்
விதமான காயத்துக் குறுதி கற்பம்
துள்ளப்பா கட்டுவகைச் செயநீர் கேளு
தொகையாகச் சொல்லுகிறே னறிவாய்க் கேளு
நள்ளப்பா தலைப்பிண்டந் தன்னை வாங்கி
நலமான கோரையுடன் வீரப் போக்கை (களள)

போக்கப்பா மூளையைநீ வாங்கிக் கொண்டு
புகழான பீங்கானிற் கலக்கிப் போட்டு
வாக்கப்பா சுத்தசல முப்பூ போட்டு
அப்பனே ரவிதனிலே சதிர்நாள் வைக்க
நாக்கப்பா நல்லதண்ணீ ரமுர்தம் போலாம்
நாதாந்த ஜெயநீரைப் பதனம் பண்ணு
மாக்கப்பா வென்வாக்கு அமுர்த வாக்கு
வளமான சத்தியமாய்ச் சொல்லி னேனே. ()

தாளகக்கட்டு.

சொல்லப்பா லிங்கத்தைத் தோய்த்து வாட்ட
சொற்பெரிய லிங்கமது முழுக்கட் டாகும்
வல்லப்பா மனிதருக்குச் சண்டாள தோஷம்
அப்பனே சன்னியுட னறுபத்து நான்கும்
மல்லப்பா தாளகத்தைக் கட்டக் கேளு
மகத்தான செயநீரிற் றோய்த்து வாட்டி

நல்லப்பா வெடியுப்பைச் செயநீரா லரைத்துப் பூசி
நலமாகப் புடம்போட உப்பாம் பாரே. (கஎகூ)

பாரப்பா தாளகத்தி னுப்பினாலே
பண்பான மேகமது இருபத் தொன்றும்
ஆரப்பா அறிவார்கள் மேகமெல்லாம்
அப்பனே யோடிவிடு மறிந்து பாரு
நேரப்பா தாளகத்தி னுப்பார் சொல்வார்
நேரான வுப்பதுதான் செய்து கொள்ளு
வீரப்பா வீரத்தின் கட்டுக் கேளு
விதமான ஜெயநீரிற் றோய்த்துக் கொள்ளே. ()

வீரக்கட்டு.

கொள்ளப்பா கொடிவேலி யிலைய ரைத்துக்
கொடிதான சரக்கின்மேற் கவசஞ் செய்து
வள்ளப்பா மண்குகையில் வைத்துக் கொண்டு
அப்பனே துருத்திகொண் டூதி னக்கால்
கள்ளப்பா வீரமது உருகிக் கட்டும்
கனமான கட்டதனைப் பூசை பண்ணு
விள்ளப்பா கட்டெடுத்துத் தோட சன்னி
விளம்பினேன் ஒருநரைப்பு உரைக்கக் கேளே. ()

பூரக்கட்டு.

கேளப்பா குளுமையுடன் விடசன்னி போகும்
கெடியான வீரத்தின் பெருமை மெத்த
வாளப்பா பூரத்தின் கட்டைக் கேளு
அப்பனே பூரத்தின் கட்டி வாங்கி
நாளப்பா ஜெயநீராற் சுருக்குத்தாக்க
நலமான பூரமது உருகிக் கட்டும்

பாளப்பா சுரமுடனே குளிருங் காய்ச்சல்
பண்பான பூரத்தாற் றீரும் பாரே. (க அஉ

பாஷாணக் கட்டு.

பாரப்பா வெள்ளையுட கட்டுக் கேளு
பண்பான ஜெயநீரும் நாகச் சாறும்
மாரப்பா நாட்டில்வைத்துச் சுருக்குத் தாக்க
அப்பனே க்ஷணத்திலே யுருகிக் கட்டும்
நாரப்பா குருகட்டு விதுக ளெல்லாம்
நலமான கட்டதனை யெடுத்துக் கொண்டு
வாரப்பா மனிதருக்குக் கொடுத்திட் டாக் கால்
வளமான வ்றுபத்துநால் சுரமும் போமே. ()

அப்பிரேக செந்தூரம்.

போமப்பா வப்பிரேக செந்தூ ரங்கேள்
பேரான கிருஷ்ணவப்பி ரேகம் வாங்கி.
வாமப்பா சுத்திபண்ணி மண்ணைப் போக்கி
வளமான கல்வத்திற் பலமஞ் சிட்டு
காமப்பா கெந்தியது பலம்ரெண் டிட்டு
கனமான கட்டுவகை நீரா லாட்டு
நாமப்பா சொல்லுகிறேன் கையான் சாற்றால்
நலமான சாமமது ரெண்டு மாட்டே. (ககூச)

ஆட்டவே நாகச்சாறு சாமம் ரெண்டு
அப்பனே பொற்கையான் சாற்றூற் சாமம்
வாட்டவே பழச்சாற்றால் சாமம் மூன்று
வளமான முலைப் பாலால் சாம மூன்று
காட்டவே மூப்பூச்சுண்ணம் பலந்தான் போடு
கனமான வல்லிச்சாறு சாம மூன்று

நாட்டவே பாட்டியதை வில்லை செய்து
நலமான ரவிதனிலே யுலர்த்தி டாயே. (கஅ௫)

ஆயப்பா வரண்பிரண்டை தூளாய்ப் பண்ணி
அப்பனே தெள்ளியதை மாவ தாக்கி
வாயப்பா சுத்தஜலந் தன்னி லிட்டே
வளமாகப் பிசைந்துமதைக் குகையாப் பண்ணி
நாயப்பா மேற்குகைதான் செய்து வைத்து
நவமாக ரவிதனிலே யுலர்த்திக் கொண்டு
காயப்பா வில்லைதனைக் குகையில் வைத்து
கனமான மேலுமந்தக் குகையான் மூடே. ()

மூடப்பா சீலைமண் ணேழுஞ் செய்து
முக்கிய முடன் புடமதுதான் இடுப்பளவு போடு
காடப்பா காடாக்கினி யாக வேகும் [ள
கனமான செந்தூரம் பணவெடைதான் கொள்
தேடப்பா வனுபான மிதற்கு நெய்தேன்
தெளிவாக நோய்கண்டு கொடுப்பா யானல்
மாடப்பா மதிகெட்ட மேகநோய்கள்
மகத்தான நீரிழிவு தித்திப்பு நீரே. (கஅள)

வசியத்திலதம்.

நீரான மேகரத்தப் பிரமி யங்கள்
நிலைகெட்டே யோடிவிடும் நிகழ்த்தி னேன்பார்
வாரான வசியத்தின் திலதஞ் சொல்வேன்
வளமான விந்திரகோ பம் குளி யானைபோடு
காரான சுழல்வண்டு ஈப்புலியோ டைந்தும்
கனமான பொடிசெய்து முத்தூ சிட்டி
யாரான தலையண்டம் நெய்யும் வாங்கி
யப்பனே கபாலத்தில் வார்த்துக் கொள்ளே. ()

கொள்ளப்பா திரியைத்தான் கொளுத்தி வைத்துக்
குணமான தலைப்பிண்ட வோடு கவிழ்த்து
வள்ளப்பா வெரித்திடவே மைதான் பற்றும்
வளமான மையதனைச் சுரண்டி வைத்து
நள்ளப்பா புனுகுடனே கஸ்தூரி கூட்டி
நலமான முப்புவது கழஞ்சு போட்டு
மெள்ளப்பா மத்தித்துச் சிமிழில் வைத்து
மேலான லாடமதிற் பணவெடைதான் போடே.

போடப்பா திலதத்தால் வசியஞ் சொல்வேன் [சொல்
பொருளான ஸ்திரீகளுக்குச் சிம்மென் றே
வாடப்பா புருடனுக்கு நங்கென் றே சொல்
அப்பனே ராஜருக்கு மங்சிங் கென்று
நாடப்பா ஜனங்களுக்கு வங்கென் றே சொல்
நலமான மிருகமது மாமா வென்று
காடப்பா வசியம தஞ்சுஞ் சொன்னேன்
கனமான வைத்தியர்க்கு வேணும் பாரே. (௧௬௦)

## வாதப் போக்கு.

பாரப்பா கருக்கிடைதா னின்னூ லப்பா
பண்பான வாதமது செய்யக் கேளு
வாரப்பா வறிவார்கள் முறைசெந் தூரம்
அப்பனே செம்பிலே பத்துக்கொன் றீய
நாரப்பா நல்லசொக்கத் தங்க மாகும்
நலமான சொர்க்கமடா சொர்க்கந் தங்கம்
காரப்பா சிந்தூரம் பட்ட போது
கனமான செம்பதுவும் பொன்னுப் போமே.

பொன்னான லிங்கத்தின் கட்டை வாங்கிப்
பொருளான லோகத்தில் கடுகியத்தான்
மண்ணான பொன்னைவிட வேறே யுண்டோ
வளமான தங்கமடா பத்தரைதா னாகும்
வண்ணான ராசியுள்ளோ ரத்தைக் காண்பார்
அப்பனே மற்றோர்கள் காணா ரையா
கண்ணான வுலகத்தில் வாத சித்தர்
கனமாகச் செய்துகொண் டலைவார் பாரே. ()

## வாதத்திற்குச் சாபம்.

பாரப்பா வலைவதுதான் ஏதென் றாக்கால்
பண்பான கனத்தகர்மப் பீடை யாலே
வாரப்பா வலைந்துகொண்டு கெட்டுப் போவார்
அப்பனே கர்மத்தா லாகா தையா
நாரப்பா நல்லோர்கள் சிவயோ கத்தால்
நலமான வாதமது காண்பா ரையா
காரப்பா வவர்செய்த கர்மத் தாலே
கனமாகப் பலியாது சாபந் தானே. ()

தானான மனையாளும் பெண்கள் பிள்ளை
தனதாகப் பிழைக்கவோ சாஸ்திரஞ் சொல்வார்
வானான மாளிமெத்தை பிலக்கக் கூட்ட
வளமான காசுசப்ந்து வட்டி வாங்கக்
கானான பெண்டீர்க்கு நகைகள் பண்ண
கனத்ததொரு வாதமது சொன்னா ரோசொல்
மானான மாயஹத்தி பிடித்த மாந்தர்
மாண்பருக்குப் பலிக்காது மயக்கத் தாலே. ()

மயக்கமது பிடித்தலைவார் மாயப் பொன்னால்
மதிகெட்ட மாந்தருக்குப் பலித மாமோ
நயக்கமது வயிர்பிழைக்க வலைவா ரப்பா
நலமான சண்டாளர் நாச மாவார்
வயக்கமது புத்தியுள்ள சிவயோ கிக்கு
அப்பனே கன்னிபது ராசி கண்டம்
வியக்கமது ராசியப்பா கண்டம் புக்கும்
விளக்கான மனக்கண்ணு லெல்லாங் காணே. ()

காணப்பா வறிவுகுரு வாசான் சாஸ்திரம்
கண்மணி யிவரைவிட்டாற் குருவங் கேது
மாணப்பா சன்னாசி சித்த ரெல்லாம்
அப்பனே யவர்சொல்லா ரறிந்து பாரு
வானப்பா விதியாளி சாஸ்திரத்தைப் பாரு
வளமில்லா மற்றோர்க்கு சாஸ்திர மாமோ
காணப்பா திறந்துவிட்டே னிருநூற் றிற்றான்
நலமான சகலகல்வி தோயச் சொன்னேன். ()

நூலின் பெருமை.

சொன்னதொரு வென்மொழிதான் மூன்று லட்சம்
சொற்பெரிய காவியந்தான் முதல்மொழி யப்
நன்னதொரு வைந்நூற்றிற் கலைக்கியா னந்தான் [பா
நலமான கலைக்கியானஞ் சித்தெல்லாஞ் சொல்
வன்னதொரு வாதமொடு ஞானப் போக்கு [வேன்
வளமான கிரியையொடு இந்திர சாலம்
கன்னதொரு காரடத்தி லந்தப் போக்கு
கனமான மோடியிலே வனந்தம்போக்கே(கசுஎ)

போக்கான வென்னந்தி யருளி னாலே
    பொருளான சகலமுந்தா னிதிலேசொன்னேன்
வாக்கான தன்வந்திரி வாக்கி னாலே
    வளமான சொல்லெல்லாந் தவறோ வில்லை
நாக்கான நந்தீச ரமுர்தத் தாலே
    நலமாக வவரமுர்த மெனக்கே யீய்ந்தார்
சேக்கான வசுவனியெ யுன்ற னுக்கு
    சொற்பெரிய வாக்கதுவே யமுர்தந் தானே. ()

## சித்தர் பெருமை.

தானான நாதாக்கள் மறந்த தெல்லாம்
    தனதாக மாட்டிவிட்டே னூல்க டோறும்
வேனான வேதவி யாசர் தானும்
    விளங்கியதோ ரென்தகப்பன் ஸ்திரியென் றைற்
வானான வவர்மொழிபோ லார்தான் சொல்வார் [றுன்
    அப்பனே யவரவருக் கெதிர்வாக் குண்டோ
கானான வடசித்தன் மொழியைப் பார்த்து
    கனமான பதினெண்பேர் தேர்ந்தாற் பாரே ()

பாரென்ற வெண்சித்தர் பதினெண் பேரில்
    பண்பான வசுவினியு மகத்தியர் தானும்
வாரென்ற புலஸ்தியனும் ராம தேவன்
    அப்பனே வூசிசித்தன் விவர்பஞ்ச சித்தர் தானும்
காரென்ற புலஸ்தியன்றான் சிறந்து விட்டான்
    கனமான ராமனவன் மறைத்து வைத்தான்
மாரென்ற சித்தரெலாம் நூல்க டோறும்
    மகத்தான கனகமதாய் மொழிந்தார் நூலே. ()

நூற்றேகை.

நூலான நூலப்பா வசுவனி தேவன்
நுணுக்கமாய் நுணுக்கிவைத்தான் நூல்க டோ
வாலான வசுஸ்தியன்றன் நூலைப்பாரு [ரும்
வளமான காவியநூல் கடைக்காண்டம் பாரு
சாலான சவுமியசா கரத்திற் றானும் [ன்னூர்
சடாட்சரத்தின் பொருளெல்லா மிதிலே சொ
நாலான வென்னுடைய நாலாங்காண்டம்
நலமான சகலமுந்தா னயந்து சொன்னேன். ()

சொன்னனடா கலைக்கியானந் தன்னைப் பாரு
சொற்பெரிய நாதாக்கள் மறைத்த சூட்சம்
சொன்னனடா வழிதுறைக ளறிந்து பாரு
சொச்சாமா யென்னைப்போற் சொன்னா ரையா
சொன்னனடா கர்மத்தைச் செய்ய வேண்டாம்
செம்மையாய்த் தருமத்தைக் கருத்தி லெண்ணு
சொன்னனடா வாதைகள்தான் செய்ய வேண்டாம்
சொல்பெரிய மனிதர்களை வையா மெண்ணே.()

வையவே ஸ்திரீகளின் மோசம் வேண்டாம்
வளமான பெரியோரை நோக வேண்டாம்
கையாலே தர்மமது மிகவே பண்ணு
கனமான ஸ்தன வாசம் பழிக்க வேண்டாம்
நையவே கர்மங்கள் செய்ய வேண்டாம்
நலமான பொய்கொலை பாவம் வேண்டாம்
அய்யவே சன்னாசி பொய் குருக்கள்
அப்பனே யிவர்களையும் பழிக்கொண் ணாதே ()

பழிச்சாக்கா லவர்பிழைப் பெல்லாம் போகும்
 பரிவாகவன்ன மிட்டு மோசஞ் செய்தால்
வழிச்சாக்கா லென்னவெடா மோசம் வேண்டாம்
 அப்பனே நெட்டுடைத்தால் சாபமெய்தும்
நழிச்சாக்காற் பெரியோரைப் பழித்த கர்மம்
 நலமாக வெத்தேசம் போனாற் றீரும்
கிழிச்சாக்கால் வல்வினைகள் வந்துசேரும்
 கிளமான சாபமடா வருத்தும் பாரே. (உ0ச)

பாரப்பா நால்வேதத் தொகுப்பைப் பாரு
 பண்பான வேதந்தான் குறியைக் காணும்
வாரப்பா வாசியுட மறப்பைக் காணும்
 வளமான நாதாந்த வைத்தி யந்தான்
காரப்பா விந்நூலி னுணுக்கந் தானும்
 கருவாகக் கார்த்தாக் கால் மெத்த நன்று
நாரப்பா வாதமென்ற மூப்பூவைக் காணும்
 நலமான கருக்கிடைதான் இருநூறு முற்றே.()

தன்வந்திரி சூக்ஷமம வைத்தியம் உ00.

முற்றிற்று.

கடவுள் துணை.

# தன்வந்திரி சூக்ஷம வைத்தியம் - ௨00.

## அட்டவணை.

அ. பக்கம்.


அப்பிரேகச் செந்தூரம் ... ... 60

அமுர்தாதிக் கலிக்கம் ... ... 11

அயபற்பம் ... ... 52


ஆ.


ஆக்கிராணத்தூள் ... ... ... 44


இ


இரசசெந்தூரம் ... ... 55


எ.


எட்டிவித்துத் தைலம் ... ... 22


க


கட்டுவகை ஜெபநீர் ... ... 58

கண்டாவிஷதம் ... ... 40

கரப்பான் எண்ணெய் ... ... 18


கா.


காந்த செந்தூரம் ... ... 56


கி.


கிரந்தி மாத்திரை ... ... ... 10


கு.


குங்குமப்பூ மாத்திரை ... ... ... 8

கே. பக்கம்.

கெந்தி செந்தூரம் ... ... ... 57

ச.

சகலவாதச் சூரணம் ... ... 26
சஞ்சீவி மாத்திரை ... ... ... 9
சண்டமாருதச் சூரணம் ... ... 30
சன்னிக் கிஷாயம் ... ... ...
சன்னி மாத்திரை ... ...

சு.

சுரமாத்திரை ... ... ...

தா.

தாம்பிர பற்பம் ... ... ...
தாளகக் கட்டு ... ... ...
தாளீசப்பத்திரிச் சூரணம் ... ...

தி.

திரு பற்பம் ... ... ...

தோ.

தோஷக் கிஷாயம் ... ... ...

ந.

நவபிரம லேகியம் ... ...

பா.

பாஷாணக் கட்டு ... ... ...

பி.

பித்தச் சூரணம் ... ...
பித்த நோய்க் கிஷாயம் ... ... 43

பக்கம்.

பித்தளை பற்பம் ... ... 51
பிரம லேகியம் ... ... ... 33

பீ.

பீனிசச் சூரணம் ... ... 29

பு.

புங்கவித்துத் தைலம் ... ... 23

பூ.

பூரக் கட்டு ... ... ... 59

பெ.

பெரும்பாட் டெண்ணெய் ... ... 21

மு.

முடக்குவாதத் தைலம் ... ... 17
முப்பூவின் பெருமை ... ... 45
மும்மூர்த்தி நெய் ... ... 39
முப்ல ரத்த நெய் ... ... ... 32

மூ.

மூதண்டத் தைலம் .. ... 23
மூலச்சூட்டிற்குத் தைலம் ... ... 25

மே.

மேகத் தெண்ணெய் ... ... 20
மேக ராஜாங்க எண்ணெய் ... ... 13.

யோ.

யோகச் சூரணம் ... ... 48

வ. பக்கம்.

வங்க பற்பம். ... ... ... 48
வசியத் திலதம் ... ... ... 61
வயிரவ மாத்திரை ... ... 9
வல்லாரைக் கற்பம் ... ... ... 47
வல்லாரைக் கிருதம் ... ... 31
வழலை முப்பு ... ... ... 5

வா.

வாத ராஜாங்க எண்ணெய் ... 15
வாளாயுத ரணத்தைலம் ... ... 24

வீ.

வீரக் கட்டு ... ... ... 59

வெ.

வெண்கல பற்பம் ... ... ... 52

க்ஷ.

க்ஷயத்தைலம் ... ... 25
க்ஷயமேகச் சூரணம் ... ... 27


தன்வந்திரி சூக்ஷம வைத்தியம் ௨௦௦.

அட்டவணை முற்றிற்று.